பழைய கோட்டை நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார் காதல்



விலை ரூ. 0. 75

திருச்செங்கோடு வீரபத்திரக் கவிராயர் இயற்றிய

பழைய கோட்டை
நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார்
காதல்

பேராசிரியர்
கு. அருணாசலக் கவுண்டர்
பதிப்பு

எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை
பப்ளிஷர்ஸ் :: திருநெல்வேலி.

முதற்பதிப்பு 1965 மார்ச் 1.

விலை ரூ. 1-50

ஷண்முகம் பிரஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை—1.

அகத்துறைப் பாடல்களும் காதல் பிரபந்தமும்

1. சங்க நூல்களில்:—

நாகரீகம் எய்திய மக்களின் தாய்மொழிகளிலே காதலைப் பொருளாக உடைய கவிதைகள் தோன்றுவது இயல்பே; இவை மக்களின் பழக்க வழக்கங்களுக்குத் தகுந்தபடிதான் அமையும்; எனினும் மொழிகளின் வளர்ச்சிக்கும் புலவரின் மேதைக்கும் தகுந்தவாறு இருக்கும்.

பண்டைய தமிழ்ப் புலவர்கள் ஆண்மை பெண்மைகளின் தவிர்க்க முடியாத தெய்வீகப் பிணைப்பே, வாழ்க்கையின் முக்கிய அம்சம் என்று கருதி, அதையே தங்கள் இலக்கியத்துக்குரிய சிறந்த பொருளாகக் கொண்டவர்கள். பாலுணர்ச்சியால் தூண்டப்பட்டுக் காதலர் துய்க்கும் இன்பத்தைப் பொருளாகக் கொண்டு எழுதப் பெறும் பாடல்கள் அகத்துறையைச் சார்ந்தன; மற்றவை எல்லாம் புறப்பொர்ருள் பற்றியவை, என்பது அவர்கள் கோட்பாடு. ஆதலின் இலக்கியப் பொருளை அகம் புறம் என்று பகுத்து அவற்றிற்குரிய திணை துறைகளை விரிவாக ஆராய்ந்திருக்கிறார்கள். எனினும், தொல்காப்பியர் புறப்பொருளைக் கூறியிருப்பது போல் அகப்பொருளைக் குறிஞ்சி முல்லை முதலிய திணை வகையிலே கூறவில்லை. கைக்கோள்வகையாக, களவு கற்பு எனக் கொண்டு ஒவ்வொன்றிலும் தலைவி கூற்று, தலைவன் கூற்று, தோழி கூற்று, என்று கிளவிகளைத் தொகுத்துச் சொல்லுகிறார். கதைப் போக்கிலே விவரிக்கவில்லை. இவரைத் தழுவி சங்ககாலப் புலவர்கள் அகத்துறைப் பாடல்களைப் பாத்திரங்களின் பேச்சாகவே அமைத்துள்ளனர். காதல் இன்பத்தைத் துய்த்தவர்தானே அதைச் சொல்லக் கூடும் ? இதைக் கதை முறையிலே கோவையாகக் கூறுவது பிற்கால மரபு.

அகன் ஐந்திணை என்ற காதல் வாழ்விலே காதலரும்பி மலர்ந்து மணமாகும் வரை உள்ளத்துணர்வாலே நுகரும் இன்பத்தைக் களவென்றும், மணமான பின் நிகழும் நிகழ்ச்சிகளைக் கற்பென்றும் வாழ்க்கையின் பல திறப்பட்ட உணர்ச்சிகளை வெட்கமோ கூச்சமோ இன்றி இவர்கள் பாடியிருக்கிற அற்புதமான காதற் கவிதைகள்வெறும் புனைந்துரை அல்ல. காதல் இன்பத்தின் நானாவித உணர்ச்சிகளையும் கவிதையில் வடிப்பதே அகத்துறைப் பாடல்களின் நோக்கம். இதை நிறைவேற்றும் முயற்சியிலே பாடியிருப்பது, இவர்களது கலைப் பண்பையும் மனத்தூய்மையையும் காட்டுகிறது. அதனால் இப்பாடல்கள் தனியொருவனுடைய புலன் நுகர்ச்சிகளுக்கு மட்டும் உருவம் கொடுக்காமல் மானிடரனைவரது ஆன்மீக அனுபவங்கட்கும் வடிவு கொடுப்பன போல் அமைந்திருக்கின்றன. இதுவே பண்டைய நம் காதல் இலக்கியத்தின் தனிச் சிறப்பு. இதைத் 'தென் தமிழ் மெய்ப் பொருள்' என்பர் சிந்தாமணி ஆசிரியர். வேதத்தை உலகுக்கு விரித்து விளக்கும் வைதிக வாணரை நோக்கி, "கேண்மின் சிறந்தது" என்று இதைக் கூறிய புலவர்களும் தமிழில் உண்டு.*

காதல் என்றால் என்ன ? அது ஒரு நோய் அல்ல, துயரமும் அல்ல. மக்களிடம் மறைந்து கிடக்கும் உணர்வே அது. அது கூடுதலும் குறைதலும் இல்லாதது. யானைக்கு மதம் உண்டாவது போல, விதி வசத்தால் ஒருவரையொருவர் சந்திக்கும் போது அது வெளிப் படுகிறதாம்.

---

* நான் மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது
தள்ளாப் பொருளியல்பில் தண்டமிழாய் வந்திலார்
கொள்ளார் இக் குன்று பயன்

—பரிபாடல் 1

காமம் காமம் என்ப, காமம்
அணங்கும் பிணியும் அன்றே. நுணங்கிக்
கடுத்தலும் தணிதலும் இன்றே. யானை
குளகுமென்று ஆள் மதம் போலப்
பாணியும் உடைத்து அது காணுநர்ப்பெறினே.
— (குறு. 136)

என்று, காதல் வசப்படல் தகாது என்ற பாங்கனை நோக்கி, தலைவன் யாரிடத்தும் அது இயல்பாக உள் ளதே என்கிறான்.

காதல் கொள்வதற்குப் பல நாள் சந்தித்து அளவளாவிப் பழகவேண்டும் என்பதில்லை. தலைமகன் கூறுகின்றான் : 'என்னுடைய தாயும் உன்னுடைய தாயும் என்ன உறவினர்? ஓர் உறவும் உடையர் அல்லரே இது போலவே, என் தந்தையும் உன் தந்தையும் எந்த விதத்திலே சொந்தமானவர்கள்? அவர்களும் பந்துக் கள் இல்லையே. இப்படி இருந்தும் செந்நிலத்திலே பெய்த மழை நீர், அந்நிலத்தோடு இயைவது போல, நம் இருவரது நெஞ்சமும் கலந்து விட்டனவே, இது என்ன வியப்பு ?—

யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங் கலந்தனவே'
— குறு 40

என்று, தங்களிடையே பிரிவு தோன்றுமோ என அஞ்சிய தலைவியைத் தலைவன் தேற்றுகிறான்.

2. திருக்குறளிலே :—

தாம் வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு —அதாவது,

காதலியின் தோள் மீது தூங்கும் துயிலினும் சுகமானது தானு மோட்ச இன்பம் என்று வள்ளுவரோடு நாமும் ஐயுறுகிறோம். இல்லையா ? இவருடைய காமத்துப் பாலின் 25 அதிகாரங்களும் 250 காதல் துறைகளைத் தாங்கி நிற்கும் 250 சிறுகதைகளே. ஒன்றே முக்கால் அடியிலே இதை எப்படித் தான் சாதிக்க முடிந்ததோ? காதல் விளக்கமே ஒவ்வொரு குறளிலும் வெவ்வேறு பாங்கில் ஒளிர்கிறது. பருகினுல்தான் கள் மகிழ்ச்சி தரும், நினைத்தாலே போதும் காதல் இன்பம் பயக்கு மாம்.

> உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்
> கள்ளினும் காமம் இனிது.

தொட்டால்தான் தீ சுடும்; காதல்போல் நீங்கினுல் சுடவா செய்யும் ?

> தொடிற் சுடின் அல்லது காமநோய் போல
> விடிற் சுடல் ஆற்றுமோ ?

அறிவுக்கு எல்லை இல்லை, மேன்மேல் அறிய அறிய முன்னைய அறிவு அறியாமையாக முடிகிறது. இது போன்றது தானும் காதலும்.

> அறிதோ றறியாமை கண்டற்றுல் காமம்
> செறிதோறும் சேயிழை மாட்டு.

3 பக்திப் பனுவல்களில் :—

இடைக்காலத்திலே பக்தி இயக்கம் ஓங்கி, காதல் இன்பத்தையும் அதை நுகரும் புலன்களையும் அடக்கிக் கடவுள் மீதே மக்கள் பக்தி செலுத்த வேண்டும் என்று பாடிய ஆழ்வாராதியர் கூட, கடவுளை அடைதலாகிய

மோட்சத்தை விளக்குவதற்கு அகப் பொருள் துறைகளையே மிகுதியும் பயன்படுத்தி யிருக்கிறார்கள். நாயக நாயகி பாவத்திலேயே உயர்வற உயர்ந்த கவிதைகளைச் சமைத்திருக்கிறார்கள். இவற்றின் 'சொல் புதிது, சுவை புதிது.' கவிதைக்கலைக்கே எல்லையாய் இருக்கக் கூடிய 'நவ கவிதை, எந்நாளும் அழியாத மாகவிதை' என்று இவற்றைத் தயக்கம் இன்றிக் கூறலாம்.

கண்ணன் எங்கே? பசு மேய்க்கப் போய் விட்டான் என்று பெருமூச்சு விடுகிறாள். மாலை நேரம்–மல்லிகை, மணத்தைப் பரப்புகிறது. 'பசுக்களும் திரும்பி விட்டனவே. கண்ணா, இது உனக்கு நியாயமில்லை. பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்குத் துன்பம் செய்யத்தான் நீ பிறந்திருக்கிறாயா? பசுக்கள்மீது வைத்த கருணை கூட எனக்கு இல்லையா?' என்று ஏங்குகிறாள். இப்படித் தவிப்பவள் கோபிகை இல்லை. நம்மாழ்வார்தான். இந்த இரவு என்ன விடியாதா? நீண்டு கொண்டே போகிறதே!

ஊரெல்லாம் அஞ்சி
உலகெல்லாம் நள்ளிருளாய்
நீரெல்லாம் தேற,
நீளிரவாய் நீண்டதோ?

சூரியனும் தோன்றாமல் எங்கேயோ போய் ஒளிந்து கொண்டானே என்கிறாள். எரிந்து கொண்டிருக்கிற விளக்கைப் பார்த்து,

செந்தாமரைத் தடங்கண்
செங்கனி வாய் எம்பெருமான்
அந்தாமத் தண் துழாய்
ஆசையால் வேவாயே

அதாவது, அவன்மேல் ஆசை கொண்டுதான் தீபமே நீயும் வெந்துகொண்டிருக்கிருயோ?' என்று கேட்கிருள்.

சமாசாரம் தோழிகளுக்குத் தெரியும். தாய்க்குத் தான் தெரியாது. நோயோ பேயோ என்று தாய் குறிகேட்க, ஆட்டைப் பலியிட்டுத் தெய்வங்களுக்குக் கள்ளைப் படைக்கிருள். இது கண்ட தோழியர்,

இதுகாண்மின், அன்னைமீர் இக்கட்டு
    விச்சி சொல் கொண்டு நீர்
எதுவானும் செய்து அங்கோர் கள்ளும்
    இறைச்சியும் தூவல் மின்

என்று தாயைக் கண்டித்து, அவளுடைய காதல், தெய்வக் காதல் என்கிருர்கள். இதைப் புரிந்துகொண்ட தாய், தன் மகள் துரும்பாய் மெலிந்து விட்டாளே. அவளுடைய சுபாவம் கூட மாறிவிட்டதே என்று பிற பெண்களிடம் பிரஸ்தாபிக்கிருள். 'என் மகளுக்கு மண்ணும் விண்ணும் கடலுமே காதலனை ஞாபகப்படுத்துகிறது. கண்ணீர் பெருக்குகிருள். இதற்கு நான் என்ன செய்வேன்.—

மண்ணை இருந்து துழாவி
    வாமன் மண் இது என்னும்
விண்ணைத் தொழுது, அவன் மேவு
    வைகுந்தம் என்று கை காட்டும்
கண்ணை உள்நீர் மல்க நின்று
    கடல் வண்ணன் என்னும் அன்னே என்
பெண்ணைப் பெரு மயல் செய்தாற்கு
    என் செய்கேன் பெய்வளையீரே'

இப்படி நம்மாழ்வார் தம் பாவனு சக்தியால், காதலியாய்த் தோழியாய்த் தாயாய், மாறி மாறிப் பிறந்து, கடவுள் மீது எல்லையில்லாத பக்தி செலுத்துகிருர். இதற்கு நிகரான கவிதை வேறு எம் மொழியிலும் இல்லை.

கோவை இலக்கியத்தில்

அகத்துறைப்பாடல்களுக்குக் காதலின் மலர்ச்சியும் வளர்ச்சியும் அது இயங்கும் முறைகளும் முக்கியம். ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத வெறும் சிங்கார ரசப் பாடல்கள் அகப்பொருள் இலக்கியம் ஆகா. சில சம்பவங்கள் மூலமாய், தலைவன் தலைவி பாங்கி அனைய பாத்திரங்களின் வாய்மொழியாய்க் காதலுணர்ச்சிகளைத் தொடர்பருது நாடகப் பாங்கில் கதைப் போக்கிலே விவரிப்பது தான் சிறப்பென்பது பின் வந்தோர் கொள்கை. இதைப் படைப்பதற்கு இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப் பாடு பாங்கற் கூட்டம் — என்றிப்படி ஓர் ஒழுங்கு முறையை வகுத்துக் கொண்டார்கள். நம்பி அகப்பொருளை இலக்கணமாய்க் கொண்டு கதைப் போக்கிலே பாடல்களை இயற்றினார்கள். இதனால் நானூற்றுக்கு மேற்பட்ட துறைகளுடன் கோவை என்ற தனிப் பிரபந்த வகை தோன்றியது. இது பொருளற்ற ஓர் இலக்கிய முயற்சி அல்ல. தற்போது இது வழக்கொழிந்த இலக்கணமாயிருப்பினும் இதைப் பின்பற்றி நூல்கள் எழுதப்படாவிடினும் இதை ஊன்றி ஆராய்ந்தால் மனித இயற்கையை அவர்கள் எவ்வளவு தூரம் துருவிப் பார்த்திருக்கிறார்கள் என்பதும், பெண் மனத்தை அவர்கள் எவ்வளவு துல்லியமாய்ப் படம் பிடித்திருக்கிறார்கள் என்பதும் புலனாகாமற் போகா. இலக்கண வரம்பிற்குட்பட்ட கோவை நூல்களின் அகத்துறைப் பாடல்கள் ஒரே அச்சில் வார்த்தாற் போல ஒரே விதமான சொல்லும் பொருளும் அடுத்தடுத்துக் காணப்படுவது இயல்பே. எனினும் புலவர்கள் தமது கற்பனைத் திறனால் விதவிதமான பாவங்களில் கலைப்பாங்குடன் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் இன்பம் அளிக்கக் கூடிய காதல் கவிதைகளைச் சாதுரியமாய்ச் சமைத்திருக்கிறார்கள். இலக்கண விதிகள் அவர்களுடைய கவித்வ சக்தியின் மலர்ச்சிக்கும் கற்பனைக்கும்

இடையூருய் இல்லாத அளவிலே அவர்களது புலமை ஓங்கியிருந்தது. இதற்கு உதாரணமாக, பாண்டிக் கோவை தஞ்சை வாணன் கோவைகளைக் குறிப்பிடலாம் இவற்றுள் பல துறைகள் உலகியல் வழக்குக்குப் புறம் பானதாகத் தோன்றலாம். காட்சி ஐயம் தெளிதல் போன்ற துறைகள் வெறும் நாடக வழக்காகக் காணப்ப டினும் அழகிய கவிதைகளைச் சமைப்பதற்கு இவை உத வாமல் இல்லை. காதலுணர்ச்சிகளையும் நிகழ்ச்சிகளையும் அதனுல் நேரும் மெய்ப்பாடுகளையும் துல்லியமாய் சித்தரிக்கும் கோவையின் இசை மலிந்த கட்டளைக் கலித்துறைகள் முழுவதுமே வெறும் புல நெறி வழக்கோ நாடக வழக்கோ அல்ல.

தலைவியை அடையப் பெற்ற தலைவன் மகிழ்கிருன். 'என்னைப்போல இவ்வுலகத்திலேயே இந்திர பதவி இன்பம் நுகர்ந்தார் யார்? வையை சூழ்ந்த தஞ்சை வாணனுடைய பொதிய மலையிலே ஆராயும் போதெல் லாம் இன்பந் தரும் தமிழே போல், இவள் கனிவாயைப் பருகுந்தோறும் இன்பம். அதுமட்டுமா? உயிர் உடலை விட்டுப் போகாமற் காக்கும் அமிழ்தாகவும் இருக்கிறது.'

யார் உம்பர் தம்பதம் என் போல் எய்தினர்,
　　இம்பர் அம்பொன்
வாரும் துறை வையை சூழ்தஞ்சை
　　வாணன் மலைய வெற்பில்
தேரும் தொறும் இனிதாம், தமிழ் போன்றிவள்
　　செங்கனி வாய்
ஆரும் தொறும் இனி தாம், அமிழ்
　　தாம் எனது ஆருயிர்க்கே.

நாணிக் கண் புதைத்தல் என்பது ஒரு துறை. பாரதி கேட்கிருர்-ஏடி கண்ணம்மா, என்ன கருத்திலே நீ இப்படிக் கண்களைப் பொத்திக் கொள்கிருய்? சின்னக்

குழந்தை என்ற எண்ணமா? அல்லது நீ வெட்கப்படும் படி தகாத காரியத்தை யாரேனும் செய்தார்களா? அழகிய உன் முகத்தை மூடிக் கிடக்கும் முக்காட்டை நீக்கினேன்; அவ்வளவுதானே—

என்ன கருத்திலடி
   கண் புதைக்கிருய்—எனக்கு
எண்ணப் படுவதில்லை
   ஏடி, கண்ணம்மா !
கன்னி வயதில் உனைக்
   கண்ட திலையோ—கன்னம்
கன்றிச் சிவக்க முத்தம்
   இட்டதில்லை யோ
வன்ன முகத்திரையைக்
   களைந்திடென்றே—நின்றன்
மதங்கண்டு துகிலினை
   வலிதுரிந் தேன்.

இதையே நானூறு விதமாய்ப் பாடி, ஒரு புலவர் தமது கவித்துவ சக்தியை மெய்ப்பித்திருக்கிருர் என்ருல் அதை நம்ப முடியாது தான். 'ஏன் இப்படி, கைகளை எடு' என்று கேட்பதிலே நானூறு விதமா?' என்று ஆச் சரியப் படுகிருேம். இரகுநாத சேதுபதி மீது அமிர்த கவிராயர் இயற்றிய ஒரு துறைக் கோவையிலே நானூறு பாடலும் நாணிக் கண் புதைத்தலே. இதைப் பார்க்கிற யாரும் புலவருடைய அகன்ற கற்பனை ஆற்றலைப் போற்ருமல் இருக்க முடியாது.

'படை வேந்தர் எல்லாம் தலை வாசலிலே வந்து கை கூப்பி வணங்கும் சேதுபதியின் மலையிலே, இடைதான் குறைந்து விட்டது. மச்சத்தையாவது காட்டா விட்டால் உங்கள் தனத்தை நான் எப்படி மதிப்பிடக் கூடும்' என்கிருன்.

கடை முன்னர் நின்று முடிமேல் தமது இரு
கை குவித்துப்
படை மன்னர் போற்றும் ரகுநாத சேது
பதி வரைவாய்
இடைதான் குறைந்தது, மச்சமும் காட்டுவது
இல்லை யென்ருல்
மடவீர் உமது தனத்தை எவ்வாறு
மதிப்பதுவே

இப்பாட்டில் வியாபார பரிபாஷையிலே 'எடை குறைந்தது. மச்சமும் இல்லை. தனத்தை - (தங்கத்தை)மதிப்பிடுவது எப்படி' என்று கேட்பது போலத் தோன்றுகிறது. இல்லையா? மெய்யாக அவன் சொல்வது 'இடை (இடுப்பு) தேய்ந்து சிறுத்திருக்கிறது. மச்சம் (மீன்) போன்ற கண்களைக் காட்டாவிட்டால் உங்கள் தனத்தை (கொங்கைகளை) மதிப்பிடுவது எப்படி' என்பதே.

மற்ருெரு பாடல். விரகதாபத்தால் தோன்றிய தாகத்தைத் தீர்த்துக் கொள்ள உங்களிடமுள்ள இளநீரைத் தருகின்றீர்கள்; கண் திறந்தால் தானே அதனுல் பயன்?—விஷயம் விளங்குகிற தல்லவா?

உளமேவு காமசுர தாகம் தீர்ந்திட
உம்மிடத்தாம்
இளநீரைத் தந்தினிக் கண் திறவாவிடில்
என் பயனே.

5. நல்லதம்பி காதல் பிரபந்தம் :—

'இன் தமிழ் இயற்கை இன்பம்' அதாவது இனிய தமிழ் கூறும் இன்பம் என்று சிந்தாமணி ஆசிரியர் போற்றும் காதல் வாழ்க்கை, களவொழுக்கம் என்றும் கற்பொழுக்கம் என்றும் இருவகைப்படும் என்ருேம். அடுப்பாரும் கொடுப்பாரும் இன்றித் தலைவனும் தலைவி

யும் விதி வசத்தால் எதிர்ப்பட்டுத் தாமே காதல் கொள்வது தான் களவு. இக்காதல் பிறவி தோறும் தொடரும் என்பது முன்னோர் கொள்கை.

இன்றை அன்ன நட்பின் இந்நோய்
இரு முறை என ஒன்று இன்றி
மறுமை உலகத்து மன்னுதல் பெறுமே —குறு 199

அதாவது, 'இப்பிறவியுடனே இக்காதல் முடிந்து விடுவதல்ல. மறு பிறப்பிலும் மன்னுதல் பெறும், ஆதலின் நீ வருந்த வேண்டா' என்று தலைவன் தன் நெஞ்சுக்கு அறிவுறுத்துகிறான். இவ்வாறு பிறவி தோறும் தொடரும் காதல், விதி வசத்தால் காதலரைச் சேர்த்து வைக்கிறது.

பால் வரைந்து அமைத்தல் அல்லது அவர் வயின்
சால்பு அளந்து அறிதற்கு யாம் யாரே. —குறு 366

அதாவது, 'தலைவனது குண நலங்களை அளந்தறிதற்குரிய தகுதி நமக்கேது? இது நல்லூழால் அமைக்கப்பட்ட தொடர்பு' என்கிறாள் தலைவி.

இவ்வாறு அமையும் காதலை இயற்கைப் புணர்ச்சி என்பது நூல் வழக்கு. காதலர் முதன் முதல் சந்தித்து அளவளாவும் நிகழ்ச்சியே அது. தற்செயலாய் நேரும் சந்திப்பிலே அன்புடை நெஞ்சங்கள் ஒன்று படுகின்றன. அளவளாவி இருந்த தலைவன், நலம் பாராட்டிப் பிரிந்து, விரைவிலே வந்து சேர்வதாகக் கூறிச் செல்கிறான். இந்த நிகழ்ச்சியே காதல் பிரபந்தத்துக்குரிய பொருள். கோவை நூல்கள் இத்துடன் நில்லாது பல நூறு நிகழ்ச்சிகளைப் பெய்து, பல நாள் கழித்துத் திருமணத்தை முடித்து வைக்கும். காதல் பிரபந்தமோ முதல் நாள் சந்திப்புடன் முடிந்து விடுகிறது. இதைப்

பல்லலங்காரப் பண்புடன் வித்தாரமாகச் சித்தரித்து, முதன் முதல் சிற்றிலக்கிய வகை ஒன்றைத் தோற்று வித்த பெருமை திருச்செங்கோட்டு வீரபத்திரக் கவி ராயர்க்கே உரியது. இவர் வண்ணூர். நல்லதம்பிச் சக்கரையால் அபிமானிக்கப்பட்டவர் என்பதற்குமேல் இவரைப் பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. பதினெட் டாம் நூற்ருண்டிலே ஒரு துறையை நானூறு விதமா கக் கூறி, கோவை நூல் பாடுவதிலே ஒரு புது வழி காட்டிய அமிர்த கவிராயர் போலவே இவரும் இயற்கைப் புணர்ச்சியை மட்டும் பாடி, அகத்துறைப் பாடலிலே ஒரு புதிய பாதையை வகுத்தார். இவர் பாடியது நல்லதம்பிச் சக்கரை மன்ருடியார் காதல். இது தான் காதல் பிரபந்தத்தின் முன்னோடி.

கோவை நூல் மிகவும் விரிவானது என்ருேம். நானூற்றுக்கு மேற்பட்ட கட்டளைக் கலித்துறைகளைக் கொண்டது. எழுத்தெண்ணிப் பாடப் பெறும் இந்த யாப்பு, உணர்ச்சி வேகத்தையோ கற்பனை விரிவையோ நிகழ்ச்சியின் விருவிருப்பையோ வெளிப்படுத்தற்கு உதவா என்று, அதை ஒதுக்கி விட்டு, வீரபத்திரக் கவிராயர் லளிதமான கலிவெண்பாவைக் கருவியாய்க் கொண்டு, லகுவான ஆனல் ரசபுஞ்சகமான காதல் பிரபந்தத்தைப் படைத்து, தமிழ்த் தாய்க்கு ஒரு புதிய படையலைச் சமர்ப்பித்தார். இது தோன்றியதும் இப் பிரபந்த வகை நாடெங்கும் பரவியது, இதன் சிறப்புக் குச் சான்று. இதைத் தழுவி, கூளப்ப நாயக்கன் காதல் தோன்றியது. நிலக் கோட்டையின் பாளையக் காரனுகிய நாகம கூளப்ப நாயக்கன் மீது (கி.பி. 1706-1732) சுப்பிரதீபக் கவிராயர் அதைப் பாடினுர். *

வேறு காதல் பிரபந்தங்கள் —

* திருமலைக் கருப்பன் காதல்
எட்டயபுரம் வேங்கடாசல மணியக்காரர் காதல்
ராசவல்லி புரம் முத்துசாமியா பிள்ளை காதல்

காதல் என்ற பெயரே அதன் போக்கை ஓரளவு தெரிவிக்கும். பிரபந்த இலக்கணங்கூறும் பாட்டியல் எதுவும் இதற்கு விதி கூருதது குறிப்பிடத்தக்கது.

தாசாங்கத்திலே பாட்டுடைத் தலைவனின் குதிரையைக் கூறுகிருர்.பகைவர்கள் தலை மீது அது நடனம் செய்து உலாவி வருகிறதாம்.

செறுநர் தங்கள் தலையினின்று
திமிதி தொந்தம் என நடஞ் செய்து
உறுவ என்பு தசை நொறுங்க
உலவு கொண்ட லன துரங்கன்

தலைவன் முரசு அதிர்கிறது :

வாரி ஒலி மீறி முகில் நேரலஇ தே தெனச் சொல்
பேரிடியுள் நாணமுறப் பேசுமணி மும்முரசான்

அவனுடைய வாசல் வளம் இது :

அன்னம் வழங்கி
அருள் வழங்கி வாணருக்குச்
சொன்னம் வழங்கித்
துகில் வழங்கும் வாசலினன்.

நண்புரிய மின்ஞர்
நடம் புரியப் பாவலர்கள்
பண்புரியப் பூமான்
பதம்புரியும் வாசலினன்

வேட்டையிலே வீழ்த்தப்பட்ட புலி வாய் பிளந்து கிடக்கிறதம்மா.

கால் துவண்டு நா வரண்டு
    கானுழன்று வாய் பிளந்து
வால்நொறுங்கி வேல் புகுந்த
    வாறு கண்டு வீரர் மிஞ்ச.

மான்கள் ஓடுகின்றன. பறவைகள் பறக்கின்றன. எப்படி ?

புள்ளிமான் கூட்டம்
    புலவரைக் கண் டோடுவர் போல்
வள்ளி மானைத் தேடி
    வாய் வெருவித் தாஞேட

நாடியுரை புள் கூட்டம்
    நல்ல தம்பிச் சக்கரையைப்
பாடிய நா வாணர் தங்கள்
    பாழ்ங்கலிபோ லே பறக்க

தலைவி தோன்றுகிருள். அவள்,

மாரன் உயர் தீபம் ! மாரன் பிரதாபம்
மாரன் அணிதூபம் மாரன் மகிழ் நிட்சேபம்
மதனன் அபிஷேகம் மதனன் அதிமோகம்
மதனன் பிரதாபம் மதனன் பணிதேகம்
முனிவோர்க்கு ஒரு சாத்ரம்
    முனிவோர்க்கு இரு நேத்ரம்
முனிவோர்கள் சற்பாத்ரம்
    முனிவோர் குருச்சேத்ரம்—

இதைவிட சொல்வதற்கு வேறு என்ன இருக்கிறது ?

கு. அருணுசலக் கவுண்டர்.

முன்னுரை

பழையகோட்டை - மன்ருடி மரபினர்

தாராபுரம் தாலுகா காங்கேயம் சரகத்தைச் சேர்ந்திருப்பது நத்தக்காரையூர்; இதை அடுத்து நொய்யலாற்றங்கரையிலே அமைந்தது ஆனூர்; பசுவளத்தால் பெயர் எய்திய இவ்வூரைப் பழைய கோட்டை என்பது நாட்டு வழக்கு. கொங்கு நாடு கால்நடைச் செல்வங்களில் சிறந்திருந்த செய்தியைப் பண்டைய சங்க நூல்கள் தெரிவியாமல் இரா. கொங்கர் ஆ* முற்காலத்திலேயே பிரசித்தி வாய்ந்தது. இன்றும் காங்கேய மாடுகளின் சிறப்பியல்பைத் தமிழ் நாடு மட்டும் அல்ல, அகில இந்தியாவும் நன்கறிந்து போற்றுகிறது.

இப் பிரதேசத்துக்குத் தலைவர்கள் பயறகுலச் சக்கரை மரபினர். 'வளவர் சேனபதிக் குடியாம் பொன்னி நாட்டு வேளாண்மையில் உயர்ந்த பொற்பினது' என்று சேக்கிழார் போற்றிய வேளாளரிலே இம் மரபினர் தொன்மையும் முதன்மையும் வாய்ந்தவர். முற்காலங்களிலே இவர்கள் தளகர்த்தராயும் நீதிபதிகளாயும் புகழ்மேவியிருந்தார்கள். அவ்வாறு இன்று இல்லை; எனினும் சேனபதி, நல்லதம்பி என்ற பெயர்களை அடுத்தடுத்தும், சக்கரை, மன்ருடி என்ற பெயர்களை நாளும் தரித்து வருகின்றனர். சரித்திரப் பெருமை வாய்ந்தவை இப் பெயர்கள்.

மன்ருடி என்ற பெயரைத்தானும் பார்ப்போமே. சண்ட பராக்கிரம மன்ருடியேன் என்றும், சதுர்வேதி

---

* நல்லான் பரப்பின் குழுமூர் (—குழுமம்) அகம் 168
கொங்கர் ஆ பாந்தன்ன — பல் யானை. பதிற்றுப் 77

மங்கலத்து மன்ருடி என்றும் வருகிற சாசனத் தொடர்களைக் கருதும்போது, ஊர்மன்றிலே இடம் பெற்று நீதி வழங்குபவர் அல்லது வழக்குத் தீர்ப்பவர் மன்ருடி ஆவார். 'பழைய மன்ருடி போலும்' என்ற சேக்கிழார் வாக்கிலேயே நாமும், சக்கரை மரபினரைக் கருதுகின்ருேம். கால்நடை பரிபாலிப்பவர்க்கும் இது சிறப்புப் பெயராக முற் காலத்திலே வழங்கியிருக்கிறது. 'விட்ட பசு முட்டாமல் மேய்த்தடக்கிப் பாசத்தால் கட்டி விடு மன்ருடி' என்ற வழக்குப் பழைய திருவிளையாடற் புராணத்திலே பயில்கிறது. கூத்தப்பிரானும் மன்ருடிதான்.

சர்க்கரையா? சக்கரையா?

நற்காரை யூர் மன்னர் நல்லசே ஞபதிக்குச்
சர்க்கரைஎன் ருேர்நாமம் சாற்றுவதேன்—மிக்க
புவிக்கும் செவிக்கும் புலவோர்கள் சொல்லும்
கவிக்கும் இனித்த ருசி கண்டு

என்று மன்ருடியாரது குண நலங்களைச் சமத்காரமாய் வியந்து ஓதுகிறது இப் பழம் பாடல். இனிமையான பண்பால்தான் அவர் சர்க்கரை எனப் படுகிருராம். இது பொருந்துவதாய்த் தோன்றவில்லை. இனிய பண்பைச் சர்க்கரையாக உருவகம் செய்துளதற்கு இலக்கியப் பிரயோகம் காணப்படவில்லை. சர்க்கரை போல்பவர்தான் எனினும் மன்ருடியார் பெயர் சர்க்கரை அல்ல, சக்கரையே. சர்க்கரையின் சிதைவும் அல்ல சக்கரை: சக்கரை என்பதன் பொருள் யாது?

கலிங்கத்துப் பரணியிலே சோழவேந்தனது தலைமைத் தாஞபதி,

சேனை தனக்கு அடையக்
கண்ணுகிய சோழன சக்கரமாம்
கருணுகரன்

என்று கூறப்பட்டிருப்பதை யாரும் அறிவர். கருணு கரன், சேனை முழுவதுக்கும் கண்ணுனவனும்; சோழ னது சக்கராயுதம் போன்றவனும். அரசர் திருமாலின் அமிசம் அல்லவா? அவரது சேனைத் தலைவரும் திரு மாலின் சக்கரப்படை ஆவது சரிதானே. சக்கரத் தாழ் வானை ஏவித்தான் திருமால் பகையை அழிப்பது; சேனுதி பதியை ஏவித்தான் சோழரும் பகை வெல்வது. எனவே சேனுபதியைச் சக்கரம் என்று உருவகம் செய்வது மரபே. கலிங்க வேந்தனுக்கு, அவன் மந்திரி, சோழர் படை நடத்திக் கருணுகரன் வந்திருப்பதைத் தெரிவிக் கும்போது,

> கண்டு காண் உன் படைவலி நீயும். அத்
> தண்டு கொண்டு அவன் சக்கரம் வந்ததே

என்று, கருணுகரனைச் சக்கரம் என்றே கூறுகிருன். தானைத் தலைவர்க்கு இப் பெயர் வழக்குண்மையைக் கல்வெட்டுகளிலும் காண்கிருேம். எனவே, தலைமைச் சேனுபதியைக் குறிக்கும் சக்கரம்தான் சக்கரை என்று மருவியதென்பது பொருந்துவதே.

சோழவேந்தரது ஆட்சிக் காலங்களிலே கொங்கு வேளிரான சக்கரை மரபினர்,. கொடும்பாளூர் வேளிர் போல, சோழர்பால் படைத்தலைவர்களாகவும் நாட் டாண்மைக்காரர்களாகவும் இருந்து, சோழ சாம்ராச் சியத்தைக் கட்டிக் காத்தனர் என்பது சரித உண்மை. இவர்களிலே ஒருவர், உத்தம சோழனுக்கு உறு துணை யாய் அவன் சார்பிலே படை நடத்திப் பல வெற்றிகளைப் பெற்றதால் மகிழ்வுற்ற சோழன், தன் பெயரையே அவருக்குப் பட்டமாகச் சூட்டிப் பாராட்டினுன். அது முதல் இம் மரபினர் உத்தம சோழன் என்ற பெயரை யும் தாங்கி வருகின்றனர். தமிழ்வேந்தர் தங்கீழ் அமைந்த குறுநில மன்னர்க்கும் மந்திரிகளுக்கும் தம் பெயரை வழங்கிச்சிறப்புச் செய்வது வழக்கமே. பெரிய

புராணம் பாடிய மந்திரி சேக்கிழார்க்கு, சோழன், உத்தமசோழப் பல்லவன் என்ற தன் பெயரை வழங்கி யிருப்பது சரித்திரப்பிரசித்தி. கொங்கு மண்டல சதகப் பாடல் ஒன்று, உத்தம சோழன் என்ற பட்டவர்த்தனர் வாழ்வதால் ஆனூர்க்குக் கீர்த்தி ; அவ்வூரால் கொங்கு நாட்டுக்குப் பெருமை என்று பேசுகிறது. *மடவளாகம் சிவாலயக் கர்ப்பக்கிரகவடபுறச் சுவரிலே காணப்பெறும் அகத்துறைப் பாடலிலும் உத்தமசோழன் என்றே காரையூர்ச் சக்கரை வழங்கப்பட்டிருக்கிறார். அப் பாடல் வருமாறு :

சரங்கொண்டு இலங்கை சமைத்தபெற்றான்,
தரியார் இறைஞ்ச
உரங் கொண்ட காரைமன் உத்தம சோழன் உபயபுயம்
இரங்கும் படிஅரு ளான் மட வீர் ! இனி என்னுயிரைக்
குரங்கின் கையிற்பட்ட பூமாலை ஆக்கும்
குளிர் தென்றலே

பண்டைய உத்தம சோழவேந்தன் மரபினனாய், கொங்கு நாடாண்ட (வீரசோழன் என்ற) உத்தம சோழன் கொடுங்கோலனாய் மாறிவிடவே, சக்கரை மர பினரான ஒருவர், பாண்டியன் சேனாபதியாய்ச் சென்று சோழனை வென்று மீண்டபோது பாண்டியனால் ' நல்ல சேனாபதி 'என்று கௌர விக்கப்பட்டாராம். அது முதல் அப் பெயரும் இம் மரபினர்க்கு வழங்கி வருகிறது. சோழன் புறங்கொடுத்தோடிய போது, பாண்டிய னுடைய புலவன் பாடியது, தமிழ் நாவலர் சரிதையிலே காணப்படுகிறது.

---

* இத்தரை மீதினிற் சேனா பதியாய் இருந்து, வெற்றி
ஒத்து வரப்பெற்ற தற்கா, தனக்கு இங்கு உறுபெயராம்
உத்தம சோழன் என்று அன்பாத் தரப்பெறும் ஓங்குபட்ட
வர்த்தனன் வாழ்வுறும் ஆனூர் திகழ்கொங்கு
மண்டலமே 87

ஆறெல்லாம் செந்நீர், அவனி எல்லாம் பல்பிணங்கள்
தூறெல்லாம் சோழன் சுரிகுஞ்சி—மாறில்லாக்
கன்னிக் கோன் ஏவலினுல் காரைக்கோன்
பின்தொடரப்
பொன்னிக்கோன் போனுன் புகார்.

நத்தக்காரையூர் சயங்கொண்ட நாதர் ஆலயத்து உள் தூண் ஒன்றிலே உத்தம சோழக் காமிண்டன் என்ற பெயர் காணப்படுகிறது. இப் பெயரே பின்னர் உத்தமக் காமிண்டன் என்று குறுகியது. நல்லதம்பி சவுக்கடி பொறுத்தபோது, புலவர் பாடியதாக வழங்கும் பாடலிலே அப் பெயர் பயில்கிறது.

கண்டால் புலவரை மேனும்பு பேசும் கச டரிட
மிண்டா, நல் உத்தமக் காமிண்டனே,
வித்து வான்களுக்குத்
தொண்டா, புலவர் சவுக்கடி ஏற்றசுமுக, கொடைத்
தண்டா மரைக்கை உத் தண்டா, நல்லதம்பிச்
சக்கரையே.

கசடர்களுக்கு மிண்டன், நல் உத்தமக் காமிண்டன் என்கிறது இப் பாடல். இப்பெயர், உத்தம சோழ வேந்தனுக்கு மிண்டன் என்று பொருள்படுவதாகக் கொண்டு, பொன்னிக் கோன் போனுன் புகார் என்பதனேடு பொருத்தி, உத்தமக் கா(ச் சோழன்)+மிண்டன் என்று பிரித்து, எழுதியவர்களும் உண்டு. உத்தமக்கா மிண்டன் அல்ல ; உத்தமக் காமிண்டன் தான்.

காமிண்டன் என்ற சொல் வரலாறு என்ன ? கங்கர், ராட்டிர கூடர், ஒய்சளர் ஆட்சிக் காலங்களிலே ஊர்த் தலைமையும் நிர்வாகப் பொறுப்பும் வாய்ந்த அதிகாரிகள் காமுண்டர். கொங்கு நாடு இவர்கள் ஆட்சியிலே அமைந்திருந்தபோது, ஊர்த் தலைவனுக்கு வழங்கிய காமுண்டன் என்ற பெயரே, நாளடைவில் காமிண்

டன் கவண்டன் கவுண்டன் என்று திரிந்தது என்பர் சாசன பரிசோதகர். ஆந்திர கர்நாடக தேசங்களிலும் காமுண்டன் என்ற சொல் உயர்தரத்து அதிகாரிகளுக்கு வழங்கியிருப்பதை சாசனங்களிலே காணலாம். தமிழ் நாட்டிலே இன்றுகூட சிற்சில இடங்களில் கவுண் டிக்கை என்ற சொல் ஊர்ப் பெரியதனத்தைக் குறிப்ப தற்கு வழங்கப்படுகிறது. இவ் வழக்கு தற்போது அருகி வருகிறது. ஊர்க் கவுண்டன் நாட்டுக் கவுண்டன் என்றால் ஊர்த் தலைவன் நாட்டுத் தலைவன் என்பது பொருள். பிற் காலத்திலே இது பெரும்பாலரான வேளாளர்க்குச் சிறப்புப் பெயராயிற்று; எனினும் இடைக் காலச் சோழ வேந்தரது பெருந்தரத்து அதிகாரி களுக்கும் இதுவே பெயராக வழங்கியிருப்பதைக் கல் வெட்டிலே காணலாம்.

'அரசர் சேனுபதியாம் விழுமிய வேளாண்குடி' என்று சேக்கிழார் பாடிச் சொல்வது சக்கரை மரபி னர் போன்றவரைக் கருதித்தான் பழைய கோட்டை, பயறகுலச் சக்கரையார் வமிசாவளி, அழகன் சக்கரை காலமுதல் கி. பி. 1245-1266 பட்ட வரிசையிலே கணக்கிடப்பட்டு வருகிறது. தற்போதைய பட்டக் காரரும் நம் மந்திரியும் ஆகிய நல்ல சேனுபதிச் சக்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் 27வது தலைமுறையினர். சரித்திரம் ஏறிப் பிரசித்தி அடைந்த இம்மரபினர் வீரதீரம் வாய்ந்து விளங்கியது போலவே, தமிழ்த் தொண்டு புரிந்து புலவர் போற்றும் புகழுடை யராயும் திகழ்ந்திருக்கிறார்கள். புலவர்க்குத்

தேர்கொடுத் தோரும் பரிகொடுத் தோரும் திருமணையின்
தார் கொடுத் தோரும் தலைகொடுத் தோரும், தமிழினுக்கா
ஊர் கொடுத் தோரும் உயிர்கொடுத் தோரும்
உதைகொடுக்க
மார் கொடுத் தோரும்

பலரான இப் பரம்பரையினரின் வரலாற்றை நாட்டுப் பாடலிலே காண்க. அவரில் நல்லதம்பிச் சக்கரை ஒருவர். இவர், புலவரால் சவுக்கடி பெற்ருர்; விலை கூறியும் விற்கப்பட்டார்; தாயை அவமதிக்கக் கண்டும் பொறுத்துக் கொண்டார். காய்ச்சிய நெய் யிலே கையிட்டுச் சத்தியம் செய்து, எச்சில் வாயும் கழுவினுர். இவ்வருஞ் செயல்களை இவர்மீதமைந்த காதல் 57—74 கண்ணிகளில் காண்க. தமிழ்ப் புல வர்க்கு மாங்கலியம் நல்கியது அதிலே குறிப்பிடப் பெறவில்லை.

இவர் காலம் எது? துணிவது சுலபமாகத் தோன்ற வில்லை. இவர் பெயருடைய பலர் பட்ட வரிசையிலே காணப்படுகின்றனர்; அவருள் 18 வது பட்டவர்த்தனர் 1675 – 1708 காதலுடையராதல் கூடும் என்பதற்கு வலுவுள்ள ஆதாரம் உண்டு. ஆனல் காதல் கண்ணி கள் கூறும் உறவுமுறையினர் 21 வது பட்டவர்த்த னர்க்கு 1773 – 1781 பொருந்துவதாகக் கொண்டு, அவரே காதல் கேட்டவர் என்பது சிலர் கருத்து. உறவு முறையினர் எவர்க்கும் காலக் குறிப்பில்லை; புறச் சான்று முன்னவரைத்தான் ஆதரித்து நிற்கிறது. இரகுநாத சேதுபதிமீது ஒரு துறைக்கோவை பாடிய அமிர்தகவிராயர், தமக்கு முன் வாழ்ந்திருந்த தமிழ்த் தொண்டர்களை நினைவு கூர்ந்து ஓரருமையான செய்யுள் பாடியிருக்கிருர். இத் திருத்தொண்டர் தொகையிலே எச்சில்வாய் கழுவிய சக்கரை சேர்க்கப்பட்டுள்ளார். எனவே, சக்கரை அமிர்தகவிராயருக்குச் சற்று முற்பட்ட வராதல் கூடும். தமது எச்சில் வாயைக் கழுவி விட்ட சக்கரையைப் போற்றி வீரபத்திரக் கவிராயர் பாடிய காதல் பிரபந்தத்தும் தமிழ்த் தொண்டர் பட்டியல் (கண்ணி 45 – 54) கொடுக்கப்பட்டுள்ளது. இதே விப ரம் ஆறை எல்லணப் புகழ்ந்த பாடலிலும் காணப்

படுவது இங்கே கருதத் தகுந்தது. * அமிர்த கவிராயரும் கூளப்ப நாயக்கன் காதல் பாடிய சுப்பிரதீபக் கவிராயரும் சம காலத்தவரே. கூளப்ப நாயக்கன் காதல் கி.பி 1710 ஒட்டி இயற்றப்பட்டது. எனவே, எச்சில் வாய் கழுவிக் காதல் கேட்ட சக்கரை 18 வது பட்டவர்த்தனராகிய நல்லதம்பி ஆதல் கூடும். இவர் காலம் 1675 - 1708.

25-12-64
திருநெல்வேலி

கு. அருணாசலக் கவுண்டர்

---

*சீரிலகு மால், மணிப் பாய்சுமந் தான். கம்பர்
சிவிகை பாண் டியன் ஏந்தினன்
செல்வமிகு கச்சியப் பன்உதை பொறுத்தனன்
திகழ்சுட்டி சோமன் ஈந்தனன்
தாருலவு குமணனும் தலைகொடுத்தான். சிவன்
தானுமொரு தூது சென்றான்
சக்கரையும் எச்சில்வாய் கழுவினான். காளத்தி
தனதிருகை புற்றி விட்டான்
பேரிலகு கம்பையனும் விரலாழி ஈந்தான்
பெரியவன் பெண்கொ டுத்தான்
பிணிமுகத் தோன்கீ ரனைப் புரந்தான். பேதை
முதுகில் அனம் ஒருவன் இட்டான்
பாருலகில் இத்தமிழ்க் குத்தொண்டு செய்தபேர்
பார்க்கிற் கணக்குஇல் லையே
பரராசர் பணிகின்ற அண்ணாம லைக்குரிசில்
பாதத்தை வருடி னானே.

உ
சிவமயம்

வீரபத்திரக் கவிராயர் இயற்றிய

பழைய கோட்டை
நல்லதம்பிச் சக்கரை மன்றாடியார் காதல்

சிறப்புப் பாயிரம்

காரை ஆனூர் மேவு காராள நல்லதம்பி
சீரைவிரித் துக்காதல் செப்பினுன் – பேருலகெண்
கோதைநகர் வண்ணுர் குலவீர பத்திரனெனும்
முதறிஞன் அன்பு முதிர்ந்து.

வரலாறு

திருச்செங்கோட்டிலே ஏகாலியர் குலத்தில் தோன்றிய வீரபத்திரன் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினுர், இவர், நல்லதம்பிச் சக்கரை மன்ருடியாரைக் காண ஆனூர் சென்றிருந்தபோது, மன்ருடியார் இவரை இகழ்ந்ததாக அனுமானித்து வருத்தத்துடன் திரும்பி விட்டார். இது தெரிந்த மன்ருடியார் விரைந்து சென்று, வழிமறித்து, கொதிக்கவைத்த நெய்யில் கையிட்டு இகழவில்லை என்று சத்தியம் செய்து உடன் வைத்து உணவருந்தினுர்; அவர் எச்சில் வாயையும் கழுவி விட்டார். அப்போது இக்காதல் பாடப்பட்டது என்பர்.

அழகு பெறுகாதல் கேட்க,
ஏனூறு பொன் தந்ததல்லாது தன்கையை
எரிந்து காய்கின்ற நெய்யில்
இசைவுபெறவிட்ட மிகுசத்ய குணசீலர்,

என்றும்

இழிகுலம் விளங்க ஒருவன்
இலை என்று நெய்யினில் கையிட்டு வாய் எச்சில்
இன்பமுடனே துடைத்(தவர்)

என்றும் மன்ருடியார் புகழப் பட்டுள்ளார். இவர் வரலாற்றினை இந்நூலில் கண்ணி 54-98 காண்க.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பழைய கோட்டை

சக்கரை மன்ருடியார் காதல்

காப்பு

பார்உல(கு)எண் காரைப் பதிவாழ் பயறகுலத்
தாருவாம் நல்லதம்பிச் சக்கரைமேல்—பேர்அரசுச்
சீர்ஆர்ந்த காதல்சொலத், தேவிஉமை மாதுதரும்
கார்ஆனை மாமுகத்தோன் காப்பு

நூல்

கடவுள் வாழ்த்து

சீர்கொண்ட பூமாது சேர்ந்தாட, அம்புயத்துள்
தார்கொண்ட நல்லதம்பிச் சர்க்கரைமன் ருடிவள்ளல்

தன்மீதில் காதலைநான் தண்தமிழால் பாடுதற்கு
மென்மேல் கருணைசெய்வாய் விக்கினவி நாயகனே

என்கருத்தின் மேவி இசைமாது வாக்(கு)உதவிப்
பன் கவிதை கூறஅருள் பஞ்சாக் கரத்தோனே

நாதர்சயங் கொண்ட நாயகர்பொன் தாள்பணியும்
சாதகனும் நல்லதம்பிச் சக்கரைமேல் காதலுக்கு

(நத்தக்) காரைப்பதி-காரையூர்; பயறகுலம்-குலப்பேர்: சாந்தை ஆந்தை போன்ற கோத்திரம்-குடிப்பெயர்களில் இதுவும் ஒன்று.

1 அம்புயம்-தாமரை; தார்-மாலை

4 சயங்கொண்ட நாதர்-காரையூர் ஈசுவரன் பெயர்

நானிலம்எ லாம்படைத்த நல்லமங்கை நாயகியே
பால்நிறைந்த ஆனூர்ப் பகவதியே முன்நடவாய்.

நல்லாண்டார் தாள்பணியும் நல்லதம்பிச் சக்கரைமேல்
சொல்ஆர்ந்த காதல்எனும் தூயதமிழ் கூறுதற்கு

முன்நின்று காத்து முடிப்பாய், வளமைபெறத்
தென்நின்(று) உலவுகலைத் தெய்வகா யத்திரியே

சூழ்திசைஎ லாம்பணியும் சோதி சிவன்மலையான்
தாள்பரவு நல்லதம்பிச் சக்கரைமேல் காதலுக்கு

நாட்டும் புகழ்வரத ராயர் இருபதமும்
தாட்டிமைசேர் நல்லாண்டார் தன்பதமும்போற்றுவனே

செங்கண்மால் என்னச் சிறந்த அமிசு பெற்றோன்
சங்கநிதி நல்லதம்பிச் சக்கரைமேல் காதல்சொல

வேய்அனைய தோளிஎழில் வீரிமா தங்கிஎனும்
தாய்கரிய காளியம்மன் தன்பதத்தைப் போற்றுவனே

பந்தம்உயர் சேனா பதிச்சக் கரைமுகிலைத்
தந்தைஎனும் நல்லதம்பிச் சக்கரைமேல் காதலுக்கு

வாக்குதவிக் கைம்மேல் வரம்உதவி எந்தனையும்
காக்கச் சயம்உறையும் காவுக் கறுப்பணனே

---

5 நல்லமங்கை நாயகி-அம்பாள் பெயர். ஆனூர்-பழைய கோட்டை

7 காயத்திரி-சரசுவதி

9 வரதராயர்-வரதராஜப் பெருமாள்

10 அமிசு (அம்சம் என்பதன் திரிபு)-இயல்பு

12 சேனாபதிச் சக்கரை-பாட்டுடைத் தலைவராகிய நல்லதம்பிச் சக்கரையாரின் தந்தை, 20-வது பட்டம். கி.பி. 1731-1772; சிவபூசைச் செல்வர்; வடமொழி பயின்றவர். நொய்யல் கோட்டை காட்டுக்கோட்டை, பாண்டமங்கலம் முதலிய இடங்களிலே வசித்தவர் என்பர் சிலர்; இது ஆராய்ச்சிக்கு உரியது.

13 கறுப்பணன், நொய்யல் கோட்டைக் காவல் தெய்வம்

தேவர்முனி வோர்கள்எட்டுத் திசையோர் பகவதிமற்று
யாவர்களும் பாருள் அகலாது காத்தருள்வீர்

அவையடக்கம்

நாடிமிகு கீர்த்திகொண்ட நல்லதம்பிச் சக்கரைமன்
றூடி மகிபதிமேல் யான்காதல் கூற என்றே
பாஉரைக்கும் கற்றோர்முன் பாடத் துணிந்ததுதான்
மேவு கதிர்க்குமுன்னே மின்மினிப்புன் பூச்சியைப்போல்
வானில் கலுழன்முன் மாமசக மேபறந்து
நான்உன் சரிஎனவே நாடும் புதுமைஒக்கும்
என்றாலும் சேய்மழலை இன்னுரையைத் தாய்தந்தை
நன்றாகக் கொள்வர்அல்லால் நானிலத்தில் தள்ளுவரோ
நல்லதம்பிச் சக்கரைவேள், நான்பாடும் பாவில்ஒரு
சொல்லதனில் சோர்வுறினும்,
தூயதென்று கொண்டருள்வான்.

தசாங்கம்

பானுநுதல் சிந்துரமாய்ப், பன்மீன்மெய்த் தேமல்எனத்
தான்உலவி வான்அளக்கும் சத்தி சிவன்மலையன்
சண்முகமாம் நல்நிதியைத்
தன்னுள்வைத்துத், தன்பெருக்கம்
விண்முகம்மட் டும்பரவும் மேலாம் பொருநையினன்
மாநிலத்தில் காசியினில் வாசிஅவி முசிஎன்று
தானுரைக்கும் அந்நதியுள் தானுயர்ந்த காஞ்சியினன்

---

17 கலுழன்-கருடன்; மசகம்-கொசு.

20 சிவன்மலை வான் அளவாய்து என்றபடி. பானு-சூரியன்
சிந்துரம்-பொட்டு

21 பொருநை-அமராவதி

22 காஞ்சி-நொய்யல்

தேனையுண்டு வண்டு தெவிட்டாக் கவிபாடி
வானுள் சிறகுலர்த்தி வாழ்காங் கயநாடன்

பஞ்சக் கருவி பலமுழங்கும் முன்றில் தொறும்
கஞ்சத் தடம்புடைசூழ் காரை நகராளன்

கைக்கு வளை பூண்மாதர் கண்பறித்து வைத்ததென
மெய்க் குவளை மாலைஅணி மேவு புயாசலத்தான்

செறுநர்தங்கள் தலையினின்றும்
திமிதிதொந்தம் எனநடஞ்செய்(து)

உறுவ என்பு தசைநொறுங்க
உலவுகொண்டல் அன துரங்கன்

கடல் கலக்கி முகில்கசக்கி
கையில்எதிர்த்த படைநொறுக்கி

அடல்மிகுந்த செறுநரைக்கை
யறஅரைத்த மதகளிற்ருன்

மேவார் ஒளிந்துசெல்லும் வேளையிலே அஞ்சல்இங்கே
வாவா எனஅழைக்கும் வண்மைமே ழித்துவசன்

வாரிஒலி மீறிமுகில் நேர்அல,இது ஏதுஎனச்சொல்
பேர்இடியும் நாணம்உறப் பேசுமணி மும்முரசான்

தன்ஆணை மீறச் சயதக் கினிகுமரன்
அந்நாள் புருஅறுத்த ஆக்கினை சக்கரத்தான்

---

24 பஞ்சக்கருவி-இசைக்கருவிகள் 5. கஞ்சம்-தாமரை

25 கைக்கு வளையல்கள் பூண்மாதர். குவலை-நீலோற்பலம்.

26 செறுநர்-பகைவர்; துரங்கம்-குதிரை

27 களிறு-யானை

28 மேவார்-பகைவர்; துவசம்-கொடி

29 வாரி-கடல்; முகில்-மேகம்

அட்ட திசைமுழுதும் அழியாத் துருவன்எனப்
பட்டஞ் செலுத்திப் பதிபுரக்கும் செங்கோலான்

காசினியில் மேவுசொட்டைக் காரர்கண்டன் எந்நாளும்
வீசுபுகழ் உத்தமக்கா மிண்டன்என வீ(று)உயர்த்தோன்

பார்க்கும் விசும்புக்கும் பணைத்துப் புகழ்ஓங்கி
ஆர்க்கும் வே ளாள குல னும் பயற கோத்ரநிதி

கச ரதது ரங்கபடை கால் கடலாய்ச் சூழத்
தச ரதஇ ராகவன் போல்
தான்சயித்து மேன்மைபெற்றோன்

பாருலகில் சேனு பதிச்சக் கரை ஈன்ற
தாருவாம் நல்லதம்பிச் சக்கரைவே ளாளன்
எங்கோன் 35

வேளாளர் தன்சீர் விளக்கவந்தோன் ஆர்க்கும்முடி
தாளாத நல்லதம்பிச் சக்கரைமன் றுடிவள்ளல்

வாசல்வளம்

சீர்உலவப் பொன்னித் திருஉலவச் செங்கனகத்
தார்உலவ ரத்தினங்கள் தான்உலவும் வாசலினுன்

கூன்முது(கு) ஒட்டகைமேல் கொட்டுகின்ற டம்மாரம்
யானையின்மேல் பேரி அதிருகின்ற வாசலினுன்

---

31 துருவன் எனப்பட்டம் (-பிரசித்தி பெற்று)

32 சொட்டைக்காரர்-வாள் வீரர். உத்தமக் காமிண்டன்-உத்தம சோழனை வென்றதால் பெற்ற பெயர்

சரங்கொண் டிலங்கை சமைத்தபெற் றுன்தரி யார் இறைஞ்ச
உரங்கொண்ட காரைமன் உத்தமச் சோழன் உபயபுயம்
இரங்கும் படிஅரு ளான்மட வீர்இனி என்னு யிரைக்
குரங்கின்கை யிற்பட்ட பூமாலை ஆக்கும் குளிர்தென்றலே

33 பணைத்து-பெருத்து

34 கசம்-யானை. ரதம்-தேர். துரங்கம்-குதிரை, காலாட் படைகள்.

சிங்களத்தார் சீனர் திறைஅளக்கச் சாளுவரும்
கொங்கர் வடகலிங்கர் கூட்டம்இடும் வாசலினன்
தாழ்ந்துபயந்(து) ஒன்னார் தலைசாய்த்துத் தன்அடியில்
வீழ்ந்து மனுக்கேட்டு வேண்டிநிற்கும் வாசலினன்
செகசோதி ரூபம்எனச் செம்பொன் பொடியே
தகதகென வே உதிர்ந்து தான்ஒளிரும் வாசலினன்
அன்னம் வழங்கி அருள்வழங்கி வாணருக்குச்
சொன்னம் வழங்கித் துகில்வழங்கும் வாசலினன்
சீர்பரியும் தங்கச் சிவிகையொடு தண்டிகையும்
கார்க்கடல தாகக், கவிமுழங்கும் வாசலினன்
நண்புரிய மின்னார் நடம்புரியப் பாவலர்கள்
பண்புரியப் பூமான் பதம்புரியும் வாசலினன்

குடிமை நலம்

நீலி பழிகொடுத்த நீதிவள்ளல் வாணருக்காய்ச்
சூலி முதுகில் சுடுசோ(று) அளித்தபிரான்

---

40 ஒன்னார்-பகைவர்; மனுக் கொடுத்து முறையிட்டு

42 வாணர்-கலைஞர்; சொன்னம்-பொன்

ஆடை வழங்க அனம் வழங்க யாசகர்க்கு மாடை வழங்க
மனு வழங்கும் வாசலினன் கூ.நா.கா. 29

45 மாறுகொடு பழயனூர் நீலிசெய்த
வஞ்சனையால் வணிகன் உயிர் இழப்ப, தாங்கள்
கூறிய சொல் பிழையாது துணிந்து செந்தீக்
குழியில் எழுபது பேரும்மூழ்கிக் கங்கை
ஆறணிசெஞ் சடைத்திரு வாலங்காட் டப்பர்
அண்டமுற நிமிர்ந்தாடும் அடியின்கீழ் மெய்ப்
பேறுபெறும் வேளாளர் பெருமை எம்மால்
பிரித்து அளவிட்டு இவளவுஎனப் பேசலாமே
—சேக்கிழார் புராணம்

ஒரு வேளாளன், தன்னிடத்து வந்த புலவன் நிறை சூல் மடவார் முதுகினில் சோறிடின் உண்பேன் என்ன, வயாவுற்றிருந்த தன் மனைவியைக் குப்புறக் கிடத்தி அவள் முதுகில் மகிழ்வோடு அன்னமிட்டுப் புலவனை உண்பித்தான்

பண்டு பறையன்என்று பாராமல் கூடவைத்தே
உண்டு புகழ்படைத்த உத்தமக்கா மிண்டன்எங்கோன்

பேணிக் கரும்பாம்பின் பேழ்வாயில் கைந்நீட்டி
மாணிக்கம் ஒன்றெடுத்து வாணர்க்(கு) அளித்தமுகில்

நாரிபா கன்தனக்(கு)இ ராவில்முளைச் செஞ்சாலி
வாரி அமுதளித்து வந்த பயறகுலன்

நீள்துகிலைத் தான்கீறி நின்று நிருபர்முன்னே
வாழ்துடையி லேசிலந்தி காட்டிவந்த மாண்பாளன்

---

46 அரசனது பரிவாரத்தால் துரத்தப்பட்ட நந்தன் சாம்பான் என்ற பறையர் பேராவூர்ப் பிரபு சாப்பாடு செய்யும் சமயத்திலே அவரது வாசலில் ஓடி, முறையோ என்று கூவ, பிரபும் தடையின்றி உள்ளே வருவித்துத் தன்னோடு உண்ணச் செய்து அபயங்கொடுத்தார். அதுமுதல் 'புலையனோடு உண்டு புகழ் பெற்ற நாடுடையார்' என்று வேளாளர் போற்றப்படுகின்றனர்.

47 நின்றையூர்க் காளத்திவாணன்

நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழல்போல
நாளைக் கிருப்பாயோ நல்குரவே – காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீஎங்கே நான்எங்கே
இன்றைக்கே சற்றே இரு

48 இளையான் குடி மாற நாயனார்

49 சோழ வேந்தன் வாங்க மாட்டாத இழை ஆயிரம் விலை மதிப்புள்ள பட்டை, சடையப்ப வள்ளல் வாங்கித் தரித்துக் கொண்டு, அரச சமுகம் சேர்ந்த போது, அரசன் பொறாமையால் மனம் புழுங்கி, நேற்று முன் தினம் அழைக்கப்பட்டும் ஏன் வரவில்லை என்று கேட்க, தொடையிற் சிலந்தி என்று வள்ளல் கூறியதை, அரசன் நம்பாததால், பட்டை, தொடை அளவு உயர்த்திக் காட்டுவது மரியாதைக் குறைவு என்று, பட்டைக் கிழித்து சிலந்தியைக் காட்டினார். அரசனே வாங்குதற்கஞ்சிய விலை மதிப்புள்ள பட்டை, அலட்சியமாகக் கிழித்துப் பண்பாட்டைப் பேணியது ஆச்சரியமே என்று 'தெள்ளத் தெளிந்தவர் செய்தக்கதோர் முறை செய்யிலையா எள்ளத்தனை மலை அத்தனையாம் என்பது இன்று அறிந்தோம்' என்று போற்றுகிறார், படிக்காசுப் புலவர்.

சேலுற்ற கேதனனைச் சேரனையும் சோழனையும்
காலில் தளைபூட்டும் காராள மாமேரு 50

வண்ணமிகு பொற்கலத்தில் மாமணிஇட் டேபுலவர்
உண்ணஎன்று சொல்லி உபசரிக்கும் வாய்அழகன்

கோணம் சுமந்தகரக் கொற்றவன்முன் நாளில்ஒரு
பாணன் பிணம்சுமந்து பால்குழப்பி மானம்உற்றோன்

---

50 ஏகம்பவாணன்.

சேனை தழைஆக்கிச் செங்குருதி நீர்தேக்கி
யானை மிதித்த அருஞ்சேற்றில் – மானபரன்
மாவேந்தன் ஏகம்ப வாணன் பறித்துநட்டான்
மூவேந்தர் தங்கள் முடி

இலங்கு பெரும்புகழான் ஏகம்ப வாணன்
விலங்கு கொடுவருக என்றான்—விலங்கியபோர்ச்
சேரற்கோ சோழற்கோ தென்பாண்டி நாடாளும்
வீரற்கோ யார்க்கோ விலங்கு.

52 பாணன் ஒருவன் அனாதையாய் வந்து இறந்து கிடந்ததை, வேளாண் மகன் ஒருவன் கண்டு, பிணத்தைத்தானே எடுத்துச் சுமந்து சென்று தகனம் முதலிய கருமங்களைச் செய்தான்.

உறவைப் பிரிந்துவந் தேஇறந்தான்அங் கொருபுலவன்
மறவைப் பதிநதி வம்சம்வந் தோன்அரங் கேசவள்ளல்
அறவைப் பிணம்சுடத் தான்செய் எண்ணான்கின் அறத்ததென்றோ
பிறர்கைக் கொடாமல் எடுத்தான் அப் பாணன் பிணத்தினையே

—பழம் பாடல்

தெந்தனஞ்செய் மாண்பர்மிண்ட
சீர்த்திபெற முன்கைதனைச்
சந்தனம்என் றேஉரைத்த தாளாண்மைக் கங்கைகுலன்

புலவர் போற்றும் புகழ்

கோத்திர இயல்பாம் குணம்என்று பன்மறையும்
சாத்திரம் உரைத்த தகைமைபோல் இந்நாளும்

கற்றுய்ந்த நாவலர்தம் கையால் சவுக்கடியும்
பெற்றான்; சயத்தம்பம் பேருலகில் நாட்டுவித்தோன்

---

53 விரிஞ்சிபுரத்திலே தன்னைப் பூசித்த ஒரு பாலகனுக்காகத் தனது திருமேனியைச் சாய்த்துக் கொடுத்தருளிய சிவபெருமானுக்கு சாத்தும் சந்தனமாகத் தனது முன்கையைத் தேய்த்தான் அந்தப் பாலகன் —

சாய்த்திட் டவர்க்குத் திருமேனி முன்கையைச்சந்தனமாத்
தேய்த்திட் டவர்க்கு நேர்?

—தொண்டைமண்டல சதகம்

55 கண்டால் புலவரை மேனும்பு பேசும் கசடரிட
மிண்டா நல் உத்தமக் காமிண் டனே வித்து வான்களுக்குத்
தொண்டா புலவர் சவுக்கடி ஏற்ற சுமுக கொடைத்
தண்டா மரைக்கைஉத் தண்டா நலதம்பிச் சக்கரையே

எவர்க் காகி லும் வருமோ இந்தக்கீர்த்தி எழுதரிய
கவிக்காயிரம் கொடுத்தவன்காண் சொட்டைக்கார
மன்னன்
சிவிக்காயறிஞன் ஒருபோதெழுந்து சினந்துவந்து
சவுக்காலடிக்கப் பொறுத்தான் நலதம்பிச் சக்கரையே.

மற்ருேர் புலவன் மடிமேல்கை போட்டிழுத்து
விற்ருல்அல் லாதுஎன் வெறுமைநோய் தீராதே

எங்கும் விலேகூற வேஇசைந்த புண்ணியவான்
பொங்கு கனகாபி ஷேகம் பொழிந்தோன்

---

56 புலவர் ஒருவர் நல்லதம்பியை விற்கமுற்பட்டது போலவே, தமிழிலே பாகவதம் பாடிய அனதாரியப்பர் என்ற வேளாளராகிய கவிஞரை, பார்ப்பனப் புலவர் ஒருவர் விற்பதற்கு விலே கூறவே, சிங்கராயன் என்போன் அவரை விலேக்கு வாங்கிஞன் என்பர்.

மிண்டரை வெல்லும் புகழ்ச்சிங்கராயன் விலேகொடுப்பத்
தண்டமிழ்மேகம் உறத்தூரில் வேதியன் தானும்விற்பக்
கொண்டவன் பின்சென்று மண்டலத்தே புகழ்கொண்ட
பிரான்
வண்டமிழ்க் கும்பன் அனதாரியும் தொண்டைமண்டலமே-

கம்பன் என்றும் கும்பன் என்றும் காளி ஒட்டக் கூத்தன் என்றும்

கும்பமுனி என்றும்பேர் கொள்வரோ-அம்புவியில் மன்ஞ வலர்புகழும் வாய்அன தாரியப்பன்

அந்நாளிலேஇருந்தக் கால்: — இவரைத்தான் விற்றது.

நம்பி காளி என்ற புலவர்க்கு விற்றுவிடப்பட்ட அடிமையாவோம் என்று வேளாளராகிய நெற்குன்ற வாணரும் பாடியிருக்கிருர்.

கற்கும் கவிவல்லே அந்தணர்கோன் நம்பி காளிக்கியாம்
விற்கும் பரிசனம் ஆகிவிட்டோம்; வட வேங்கடமும்
பொற்குன் றமும்புகழ்க் கங்காநதியும் பொதியமும்போல்
நெற்குன்றமும்நம் மரபும்எந்நாளும் நிலேநிற்கவே

தங்கள்சமு கத்திருந்த தண்தமிழோன், அன்றுஒருநாள்
செங்குன்றை எல்லன் தியாகி அவன்சபையில்

சென்று தமிழ்பாடச் சிந்தை மகிழ்ச்சியதாய்
வென்றி வெகுமதியும் வேணபரி சேஉதவ,

அப்போ(து) இடதுகரத் தால்வாங்க, ஏதுஎனவே
எப்போதும் சக்கரைபால் ஏற்ற வலக்கரத்தால்

எங்கணும்ஏற் கோம்எனலால் இதயத்தில் கோபமுற்றுச்
சங்கத் தமிழ்வலனைத் தான்காவ லாகவைத்தே

அத்தமிழோன் சொன்னகொடை
யாளன் புகழ்ச்சியினைச்
சுத்தஉரை நாவலர்போய்ச் சோதித்து வாரும்என்ன,
அந்நா ழிகையில் அவர்விரைந்து நாடிவந்து
தென்னூர்கா ரைப்பதியுள் சீமானைப் பாடியதால்
மென்மேல் கருணைஉற்று
வேண்டுவகேள் என்றுரைக்கப்
பொன்மே ருவைத்தரினும்
போதும்என்று சொல்லுவரோ ?

ஐயநின் பந்தியுள்நின் அன்னை அமுதளிக்கச்
செய்யஎன அவ்வகை செய்ய அருந்துகையில்
அன்னைவெரிந் மேற்கொளச்சேய்
ஆநந்தத்தைப் பார்த்திடலும்
என்னைஈ ரைந்துதிங்கள் இன்பாய்ச் சுமந்தீரே

---

58 ஆலெங்கே அங்கே அரும்பறவை ஆல்துயிலும்
மாலெங்கே அங்கே மலர்மடந்தை – சோலைதொறும்
செங்கே தகைமணக்கும் செங்குன்றை எல்லன்எங்கே
அங்கே இரவலரெல் லாம்.

செங்குன்றை எல்லாநின் செங்கைக் கொடைஅதனுக்கு
எங்கெங்கும் தேடி இணை காணேன் – கொங்கதனில்
சக்கரையைப் பாடலாம் தண்டமிழ்க் கொன்றீயாத
எக்கரை யாம் பாடோம் இனி.

—பழம் பாடல்

இவரை ஒருநிமிட மேசுமப்பீர் என்றுரைக்கும்
பவளவாய்த் தருமணிப்போல்
பாரினும்பொன் நாட்டில்உண்டோ

என்னத் தமிழோர் இயம்பப் பரிசுதவி
அன்னவர்பால் சென்றுசொல ஆங்குதடை செய்திருந்த

கற்றேனை வாளனவே கனகமணிச் சிவிகைதந்து
உற்றசவு பாக்கியங்கள் உபசரித்துத் தான்கொடுத்து

போம்என்று சொல்லிஇந்தப் பூஉலகில் ஏழுவள்ளல்
தாம்என்று சொன்னாலும்
சக்கரைவேட்(கு) ஒவ்வாதே 70

என்றுரைக்கப் பெற்றபுகழ் யார்க்கா கிலும்வருமோ
நன்றிதரும் நல்லதம்பிச் சக்கரைசெய் நல்-தவமே

---

70 இக்காதல் 45-53 கண்ணிகளில் கூறப்பெறும் சக்கரையின் குடிமை நலம் எல்லனேப் புகழும் ஆறைக் கலம்பகத்தும் கூறப்பட்டிருத்தல் இங்கே ஒப்புநோக்கத் தகுந்தது.

பன்றிகோ டுழுத நந்தி வெற்பன் இரு
பாரவெற்பினை அடுக்கிலான்
பாணன்வெம் பிணம் எடுத்தவன் கொடிய
பாணன் வெம்பிணம் எடுக்கிலான்
சென்றுநெல் முளையை வாரினேன் புதிய
திங்கள் வெண்முளையை வாரிலான்
செட்டிதன் பழிதவிர்த்தவன் பரிவு
செய்துபெண் பழி தவிர்க்கிலான்
அன்று சூலிமுது கன்ன மிட்டவன்
அன்னைகூன் முது கழிக்கிலான்
அங்கை ஆடரவின் வாயிலிட்டவன்என்
அல்குலா டரவு தீண்டிலான்
வென்றிமேவு துடைஆடை கீறினவன்
வேலைஆடையது கீறிலான்
வீறுலாவு தமிழாறை மேவுபர மேசுரன்
புதல்வன் எல்லனே. —ஆறைக்கலம்பகம்

தூசர்குல வாணனுக்கோர் சோர்வுரைக்க வில்லைஎன
நேசமுட னேகாய்ந்த நெய்அதனில் பாணிஇட்டோன்

ஓங்குசொட்டைக் காரர்கண்டன்
உத்தமக்கா மிண்டன்என்றே
ஈங்(கு)உலகில் உன்னைஅல் லால்
எவர்க்கும் தான்வருமோ

நல்லதம்பிச் சக்கரைவே ளாளன் பெருமைஎன்னுல்
சொல்லமுடி யாது;உரகன் சொல்லவும்நாப் போதாதே

---

72 மகிழ்ந்துகா ரைப்பதியில் வாழ்சக் கரைதான்
புகழ்ந்துதிரிபுல வோரை—இகழ்ந்துநான்
வையவில்லை என்றுசொல்லி மண்டலமெல் லாந்துதிக்க
நெய்யிலே கையைவிட்டான் நேர்ந்து

இதுபோலவே மற்ருெரு சம்பவம்; ஒரு வேளாளன் தன் புதல்வன் பாம்பு கடித்து இறந்ததால் உண்டான விசனத்தை வெளிப்படுத்தாமல் மறைத்து, கம்பருக்கு விருந்திட்டு, இறந்தவனைப் பிழைப்பித்துக் கொண்டு, அவர் ஏர் எழுபது பாட, அதனுலும் கீர்த்திபெற்ருன். இச் சம்பவத்தை அரசன் ஐயுறவே, காய்ச்சிய நெய்யில் மூழ்கியும் பழுக்கக் காய்ந்த மழுவை ஏந்தியும் மெய்ப்பித்தார்களாம்.

விழுமிய சொற்கவி கம்பற்கு இறந்த சேய்தனை மறைத்து
விருந்துசெய்து, ஏர்
எழுபதொடுஅச் சேய்உயிரும் பெற்றனர் தம்மரபினர்
என்று இயம்பச்சோழன்
பழுதுஇது கற்பனைஎனத் தான் பண்ணுவன் சத்தியம்
பறக்கும் நெய்யில் [எனத் தீ
முழுகிமழு வேந்திநின்ருன் வெண்குன்றத் தவளகிரி
முதன்மை யோனே-

வாய்மை :

மேரு அசைந்திடினும் வெய்யோன் திசைமாறி
மாரி தவறிடினும் வார்த்தைதவ ருதபிரான்

கொடை

கற்பகத் தாரும் கவடான தேசுரபி ;
பொற்பதிமன் சொற்படியே
புயல்கொடுத்தால் வெண்மையதே
சாற்றும்எங்கள் நல்லதம்பிச் சக்கரைமன் றுடிகொடை
ஏற்றம்என்று சொல்வதுசந் தேகமோ இப்பாரில்

குரு

சொல்லாரும் விப்ரகுலச் சோதி மணிவிளக்காய்
எல்லார்க்கும் நாயகனுர் என்றகுரு தேசிகனைப்

போற்றி இசைபடைத்த புண்ணியவான் இப்புவியில்
தோற்றுதலை வள்ளல்எனத் தூய புகழ்படைத்தோன்

---

75 மாமறைநூல் பொய்த்தாலும் வாரிதிநீர் பொய்த்தாலும்
சோமரவி பொய்த்தாலும் சொன்னமொழி பொய்யாதான்
அண்டர்தரு வுக்கும் அருங்காம தேனுவுக்கும்
கொண்டல் தனக்கும் கொடைபயிற்று செங்கரத்தான்
கூ. நா. கா. 31, 32

76 வேண்டியதை நல்கும் கற்பகதரு கவடானது—கிளைகளை யுடையது; சுரபி (-காமதேனு கவடானது (-வஞ்சகமுள்ளது). பொற்பதி(-அமராவதி) மன் (-இந்திரன்). புயல்-மேகம்; இது பெய்தால் வெளிறி விடுகிறது.

78 விப்ரகுலம்-பிராமணசாதி.

79 தலை (சிறந்த) வள்ளல்

அன்பு பெருசிவந்தா ரையன் சிரோன்மணியை
இன்பமுறு சொட்டைக்(கு)
இசைந்தகுரு வாய்ப்படைத்தோன்

உற்ருர் உறவினர்

ஆண்மைதர நல்லசே ருபதிமால் சக்கரையைக்
கேண்மைஉற சேட்டபுத்ரன் என்னக்
கெலிவுபெற்ருேன்

அரசுநல்ல சேரு பதிச்சக் கரைமுகிலைத்
திறம்உதவு செங்கோல்
செலுத்தும்மக வாய்ப்படைத்தோன்

அன்புரிய நல்லசே ருபதிவேள் சக்கரையைப்
பொன்புரியும் செல்வன்எனப் புண்யதரு வாகவந்தோன்

தருமன்என வந்தசின்னத் தம்பிஎழில் சக்கரையை
வரும்உலகி லேகனிஷ்ட மாமகவுஎன் றேபடைத்தோன்

கொற்றவேல் முத்தையனைக் கூர்மைமிகும் நல்லையனை
உற்றபுகழ் நல்லதம்பிக்கு
உகந்தகுண தேவனும்

சீராரும் செல்வச் சே ருபதிக்(கு)இளையோன்
பூராய மாகவந்த புண்ணியனும் கந்தப்பன்

புரவிக்கு நகுலன்என்று பூவுலகோர் தாம்மகிழும்
திறமிகுத்த விஸ்வநா தேந்த்ரன்எனும் பேரழகன்

---

80 அரண்மனையிலே எழுந்தருளியிருக்கும் செண்டிகாதேவியின் ஆதி அர்ச்சகரான இம்முடி சிவந்தாரையன் பரம்பரையிலே வந்தோன்.

87 சேட்ட புத்திரன்-தலைமகன், நல்லசேருபதி. கனிட்ட புத்திரன்-சின்னத் தம்பி; நடுவுள்ளவர் கந்தப்பன் முத்தையன், நல்லையன்-ஒரு சகோதரன் விசுவநாதன்; இவர் கொன்னபாளையம் தத்துக்குப் போனவர்; மற்ற சகோதரர்கள், குட்டபாளையம் கிழக்குவளவு, கல்லங்காட்டு வலசு-இவ்விடங்களிலே வசித்து வந்தனர் என்று கேள்வி.

தமிழில்அதி சாதகனும் தாரணிக்குள் மெய்ப்பான
அமிர்தகுண வான்எவர்க்கும் ஆணிமுத்து நல்லதம்பி

நவரத்னம் போல்எனவே நல்லதம்பிச் சக்கரைவேள்
புவனம்அதில் சகோதரராய்ப்
பூர்த்திஉட னேபடைத்தோன்

சுந்தரஞ்சேர் மேன்மைத் துணைவர் எனப்படைத்த
மந்தரநே ரும்புயத்தோன் வாய்மைதவ ருதமன்னன்

நாரணன்நே ராகவந்த நவில்பூந் துறைநாடன்
வாரணவா சித்துரையை மாமருகன் என்றழைப்போன்

வீடணனைக் காத்தருளும் மேருபொரு ளந்தைகுலன்
காடையூர் மேவும்கா பாரி தென்னவனும்

மால்குமர காங்கயமன் ருடி மகீபதியைத்
தால மகிழத் தமையன்என வேபடைத்தோன்

நிதம்பரப்பல் லார்ந்தகுழல் நேரிழையார் வேளாம்
சிதம்பரப் பல்லவரா யர்அதீச்சிம் மாசனனை

நன்மைத் துனன்எனும்சீர் நல்லதம்பிச் சக்கரைவேள்
மின்வைத்(து) இலங்குகன மேழிக் கொடிக்கதிபன்

புராதனமாய்க் கூர்மைமதி பூண்டபிள்ளை மார்தனிலே
தராதரம்பார்த் தேஉரைக்கும் சற்குணவி வேகன்என

வாசல் அதிகாரம் வண்மையுட னேசெலுத்த
நேசமுடன் நல்லையனை நிச்சயமா கப்படைத்தோன்

செங்கோல் முறைமை சிறிதெனினும் குன்ருமல்
அங்கே உலகாளும் அந்நாளில் ஓர்பொழுது –

---

91 பூந்துறை வாரணவாசி மருகன்

92 காடையூர் குமார காங்கயன், தமையன் முறை

94 புதூர் பட்டக் காரர் சிதம்பரப் பல்லவராயர்; இவர்-சகோதரி-மனைவி.

97 நல்லைய பிள்ளை வாசலதிகாரி.

கொலுவிருத்தல்

தீர்த்தமது தானுடிச் சீர்பெறவெண் நீ(று)அணிந்து
நீர்த்தவழும் வேணிமதி நின்மலனைப் பூசைசெய்து

மந்திரிதள கர்த்தர்கவி வாணர்கரு ணிகர்உயர்
தந்திரிகள் சேர்வையொடு சார்ந்தகுறிக் காரர்களும்

மிக்க அமுதருந்தி வேண்டியசவ் வாதணிந்து
தக்கசந்தம் கஸ்தூரி சாற்றித் துராய்இலங்க

தங்கநிரா சிப்பாகும் தானிலங்கக் கட்டி,நன்ருய்
அங்கம்எங்கும் பொன்னு பரணத்(து) அணியலுற்ருர்

காதுக்கு இசைந்த கடுக்கன் அணிந்துஅதனின்
மீதுக்குக் கல்அழுத்து மேன்முருகு தான்பூட்டி

தங்கம் அழுத்தி அதில் தான்பதித்த கேயூரம்
பொங்க முடன் இலங்கப் பூணும் பதக்கமுடன்

தண்தரள மாலை தளுக்குச் சரம்அணிந்து
மண்டலத்தில் கிட்டாத வச்ர வளை அணிந்து

முன்கைக்(கு) இலங்க முழுப்பச் சிலைக்கடையம்
மின்கட் டளையாக விந்தையுட னேதரித்து

பத்துவிர லுக்கும் பசும்கனகத் தால்இழைத்து
வைத்தழுத்து ரத்னவகை மாமோ திரம்அணிந்து

---

99 வேணி(-சடை)யில் மதிசூடிய

100 குறிக்காரர், குறிபார்த்து எய்வதில் வல்லவர்
சந்த(ன)ம்; துராய்-தலையணி

102 பாகு-தலைப்பாகை, தங்கச்சரிகை போட்டது

103 கடுக்கன், முருகு காதணிகள்

104 கேயூரம்-தோள் வலயம்

பொன்னின் அரை ஞாண் இடையில் பூண்(டு) இருதா ளின் விரற்கு
மின்னுபசும் பொன் உருட்டு மிஞ்சியது வே அணிந்து

வீரக் கழல்வீர கிண்கிணிவீ ரத்துசங்கள்
வீரகண்டா மாமணிகள் மிகுவீர கங்கணமும்

நாதகீ தத்தொனிகள் நால்-திசையுமே முழங்கச்
சீதரன்போ லேஅரிய சிங்காச னத்திருந்தான்

வேட்டைமேற் செல்லல்

அப்போது தான்வேட்டை யாடித் திரும்பஎன்றே
செப்பலுற்ருன் ஐயன் திருவுளத்தி லேகருதி

மாகதரை நோக்கி வனவேட்டைக் காரருக்கும்
பாகருக்கும் மற்றைப் பதியுளர்க்கும் சொல்லும் என்ருர்

மன்னன் எழுந்திருந்து மாளிகையின் உட்புகுந்து
சொன்னமயச் சல்லடத்தைத் தொட்டுயர்த்துப் பட்டிகட்டி

பேட்டியொடு கச்சைகட்டிப் பேரம்புத் தூணிகட்டிப்
பூட்டித் தலைமுடிகள் பொங்கமுட னே சேர்த்து

ஏலமிகு பொன் பூண் இறுக்குவார் தோல்கவசம்
காலதனில் இட்டு சொட்டைக் காரர்கண்டன் வாள்பிடித்து

சிங்காணி பூட்டிச் சிலை ஏந்திக் கைசூரி
அங்கார் சமுதாடும் ஆர்ந்தகைவேல் நேரிசமும்

சக்கரம்கை அம்பும்மழுச் சாற்றுபதி னெண்படையும்
மெய்க்கரம் கொண்(டு) ஆனையின்மேல் வீரசிங்கன் செல்வதுபோல்

---

110 *சீதரன்-ஸ்ரீதரன்*

116 *சமுதாடு-ஈட்டிபோன்றது*

தான்எழுந்தான் ஐயன் தவில்முரசு பேரிகையும்
வான் அதிர்ந்த(து) என்ன
வகைவகை மே ளம் தொனிக்க

பூசக் கிரக்கவிகை பூந்தவ ளக்குடைகள்
ஏசக்ர வாளம்என எங்கணும்நின் றே பிடிக்க

நாலுவர்னப் பாவாடை நற்சா மரை இரட்டத்
தாலமகிழ் அண்டத்துச் சல்லி விரு(து)உலவ

தண்டைஇடு வார்கள்மிண்டன்
சாமத்து ரோகவப் பொன்
வெண்டயத்தைப் பூண்டு விறல்கே சரிஎனவே

வாசாம கோசரனும் மன்னன்அரி ஏறெனவே
ஆசார வாசல்கடந்(து) அக் கோட்டை வாசல் வந்தான்

மேழிக் கொடிவிருது வீரசந்த்ரக் காவிநிசான்
வாழிக் கவின் கவிகை மண்டலத்தைத் தான்மறைக்க

அட்ட கயத்தையும்நீ றிட்ட கயத்தழுத்தி
விட்ட மதகளிற்றின் மேற்கொண்டு தான் இருந்தான்

பரிவாரங்கள்

தாவு பரிஏறித் தன்கரத்தில் வாள்ஏந்தி
மேவி இருமருங்கும் வேல்வேந்தர் சூழ்ந்துவர

சேனு பதித்தலைவர் சேனையொடு வீரர்களும்
தானு பதிகளொடு தக்கசொட்டைக் காரர்களும்

கையாளர் ஊழியப்பேர் காரியஸ்தர் சேவகரும்
மெய்அமருக் காரர்களும் வீரர்படை அத்தனையும்

சூழ்ந்து பிரியாமல் துஷ்ட மிரு கங்கள் எலாம்
வாழ்ந்த(து)இது போதும்என மாழ்கி மலைஏற

வேங்கைப் புலியைஒரு வெட்டில் வெட்டி எங்கோமான்
ஆம் கைக் கடையம் அதுவாக்க வேணும் என்று

---

119 பூசக்கிர கவிகை; சக்ரவாளம்

கேசரியைத் தான்முடுக்கிக் கிட்டிக் குடல்கிழித்துக்
கேசரியைப் போன்ற நங்கோன்
கீர்த்திபெற வேணும் என்று

சோணமுகி லாம்கரடித் தோல்வாங்கி நம்பெருமான்
ஆனமுக னுக்(கு) அணிந்தே
அன்புசெய்ய வேண்டும் என்று

ஏனத்தைக் கைவேலால் ஈர்ந்துகுத்தி நல்ல வெகு
மானத்தைத் தான்வாங்கி வண்மைபெற வேணும் என்று

கவரிமான் வாலைவெட்டிக் கந்தன் அன்று கானுள்
சவரிமா னுக்குஇரட்டத் தான்கொடுக்க வேணும் என்று

அம்மானைக் கொன்றுகையுள் அம்மான தானுடிப்
பெம்மானைப் போற்றும் பெருமானைக் காண்பொமென்று

காட்டெருமை யைத்தொடர்ந்து
கைவேலால் குத்தி ஒன்னுர்
கோட்டை வெட்டி ஊதுகரிக்
கொம்பாக்க வேணும் என்று

இப்படித் தான்சிலபேர் எண்ணி இருமருங்கும்
செப்பருந்துப் பாக்கிகொண்டு சேனைபுடை சூழ்ந்துவர

தோமரம்எல் லாந்திரண்டு
தோன்றுவிண்ணில் கற்பகப்பூங்
காமரத்தைக் கொண்டுவந்து
காரைநகர் சேர்த்துவர்போல்

காரில் புயலைஎல்லாம் கால்சாயத் தான்அடித்து
வாரிக் குடிப்பதுபோல் மதகசம்கை வீசிவர

காட்டைவிட்டுப் பல்மிருகம் கைகடந்து வான்உலகம்
தாட்டும்அது பார்க்கஓட்டை தான்விசும்பை நோக்கிவர

வீருய் மெழுகுகுல்லாக் கட்டிவிந்தை மேவுகச்சை
மாருய் இடைக்(கு)அணிந்து
மாறுகண்ணும் கீறுடம்பாய்

மீசை முறுக்கிவிட்டு வெண்தோல் கவசம்இட்டுப்
பாசைஅறி யாஎயினர் பாதம் பணிந்துநின்ருர்

சூரியபான் பானுவரைத் தொட்டு மறைப்பதுபோல்
பாரிய டக்கயங்கள் படபடஎன் றேபறக்க

கோணக்கொம்(பு) ஓசையினுல் கொச்சி குடிவாங்கத்
தோனத் தவில் தொனிக்காய்ச் சோனகர்அங் கேஒளிய

பேரிகைச்சத் தங்களுக்குப் பேர்அண்டம் தான்பிளக்கப்
பூரிகைஓ சைக்(கு)அருண்டு
போய்க்கலிங்கர் கோடு ஏற

சகுன பலன்

தானமுகில் நல்லதம்பிச் சக்கரைமன் ருடிவள்ளல்
மானபரன் எய்தும் வழிஅதி லேசகுனம்
காடான் கரிக்குருவி காணும் இடமாகி
தாடாண்மை யாம்கருடன் தானம் இடமாக
பல்லி பலபலென்று பண்புபெறப் புன்னையின்மேல்
சொல்லுவதால் இந்தத்
தொகைஅறிந்தான் அங்கொருவன்
நல்ல சகுனம்என்று ராமாவ தாரனுக்குச்
சொல்லி, விசைப் புள்மூன்று தோன்றிஇடம் ஆனதினுல்
சந்தனமா ராசனுக்குத் தான்பண்டு கங்கைமகள்
வந்ததுபோல் இன்(று)உமக்கோர்
மாது வசம் ஆகும்என்ருன்
பல்லிசொன்ன சாத்திரத்தைப்
பார்க்கில் இந்தக் கான்வேட்டை
வல்ல மிருகம்எல்லாம் மடியும்
உந்தன் கையில் என்ருன்
புகலும் உரைகேட்டுப் பூரித்துச் சற்றே
நகைபுரிந்து தான்நடந்தான்
நல்லதம்பிச் சக்கரைவேள்

வன வேட்டை

சிவன்மா மலைச்சார்பில் சென்(று)அணுகி அங்கே
நவமாம் எயினர் தம்மை நாலிடமும் சொப்பவிட்டு

வேட்டைவெடிக் காரர்தம்மை
மேவியகட் டாப்பில் வைத்து
காட்டைக் கலைக்களன்று கைக்கா ரரைநிறுத்தி

மத்தகயம் விட்டிறங்கி
வாள்உறைவிட்(டு) ஆர்ப்பரித்துச்
சத்தமே கங்கள்எனத் தானத் தொனிமுழங்க

திக்குளங்கும் கானவரைச் சேரவலை கட்டவிட்டே
பக்கவெடிக் காரர்தமைப் பந்தி பந்தி யாய்நிறுத்தி

சிங்கம் புலிகரடி சேர்ந்த மிருகம்எல்லாம்
அங்கங்கே சின்னபின்ன மாய்ப்பறந்து தான்ஓட

சாடுவார்கள் வேலால் தகைப்பார்கள் ஈட்டிகொண்டு
போடுவார்கள் குத்திப் புதையத் துணிப்பாரும்

துப்பாக்கி கொண்டே சுடுவோரும் ஓட்டியும் இ—
ளைப்பாக்கி நோக்கி அடிப்பாரும் மீட்பாரும்

தரை உனிப்பில் மேவினரை தான்சதிக்க வந்தபுலி
உரை உளரி வீழ்ந்து அரற்ற உண்டைதட்டா ரித்தோட

கால்துவண்டு நாவறண்டு கான்உழன்று வாய்பிளந்து
வால்நொறுங்கி வேல்புகுந்த
வாறுகண்டு வீரர்மிஞ்ச

ஏனம்அது மேவி இடுபோதில் ஆனைபுலி
மானைஇரு கூறுசெய மாகரடி ஓலம்இட

பன்றியும்ம டங்கல்முய லும்சரிள னும்படிசெய்
சென்றுவிழ வெண்கவரி யும்துணிய என்புஉருவ

புள்ளிமான் கூட்டம் புலவரைக்கண்(டு) ஓடுவர்போல்
வள்ளிமா னைத்தேடி வாய்வெருவித் தான்ஓட

நாடிஉரை புள்கூட்டம் நல்லதம்பிச் சக்கரையைப்
பாடியநா வாணர்தங்கள் பாழ்ங்கலிபோ லேபறக்க

ஆனும் தளத்தொனியும் ஆர்த்தமிரு கத்தொனியும்
வானும் புவியும் மலையும் கிடுகிடென

நாதன்அர வப் பணியும் நாரணன்செவ் வேள்ஊர்தி
வேதன்அனக் கேதனம்விண்
வேந்துவெள்ளை வாரணமும்

அஞ்சிப் பயந்துதங்கள் ஆண்டவனைத் தான்கேட்க
நெஞ்சில் பயம்அகற்றி நேசம்உட னேபுகல்வார்

பந்தம்உயர் சேனு பதிச்சக் கரைராயன்
சந்ததியாம் நல்லதம்பிச் சக்கரைமன் ருடிவள்ளல்

நம்அடியான் வேட்டைஎன்றே
நாடிவந்தான் துன்மிருகம்
அம்மலையில் வாழாமல் அத்தனையும் கொன்றுவிட்டான்

ஆங்கதனில் தப்பிவரும் அம்மிருகம் பட்சிஎலாம்
ஈங்(கு)அபயம் இட்டசத்த
மேஉனக்குக் கேட்ட தென்றூர்

இந்தப் படியவர்க ளேஉரைக்க மெய்தேறி
விந்தைமயில் பாம்புகயம் வெள்அனமும் வெட்கியதே

மானைத் தொடர்ந்தோடல்

இவ்வாறு கோமன் எழில் வேட்டை ஆட வலைக்(கு)
ஒவ்வாம லே ஒருமான் உந்திக் குதித்தோட

---

164 கூடும் மயிற் கூட்டம் கொடுக்கின்ற தாதாவைப்
பாடும் புலவர் கலிபோல் பறந்தோட — கூ. நா. தா. 88

எட்டி நின்ற பேர்க்கும்எறி ஈட்டிகட்கும் எட்டாமல்
கட்டவிழ்த்துத் தான்ஓடும் கள்வர் தமைப்போலச்

செல்கதியைக் கண்டுமிகு சீக்ர கதியாக
நல்லதம்பிச் சக்கரைவேள் நடந்தான் தனுவாங்கி

மான்ஓடப் பின்ஓடி வாய்வுகதி பின் அடையத்
தான் ஓடி யேஒருமான்
தனைச்சரத்தி னால்செகுத்தான்

சோலை போய்ச் சேர்தல்

கண்ணன் இராமன்எனக் கையுள் தனுமேவத்
தண்ணார்ந்த பூங்காவில் தாகம் தணிப்பதற்காய்

தனியே வனம்புகுந்து தன்தாக சாந்திக்(கு)
இனிய சலம்அருந்தி எங்கோன்அங் கேஇருந்தான்

ஆனனத்து வேர்வை அகற்றுதற்கு மென்விசிறி
தான்எனப்பூங் கொத்துத் தலைசாய்த்(து)அங் கேவீச

வேலைநல்ல வேளைமத வேள்வந்தான் இங்கெனவே
பாலை கவுரி பணிமாரி அங்குலவ

மேவியபொன் மான்செகுத்த விண்டுவுக்குப் பூமாரி
தேவர் பொழிவதுபோல் தேன்வனங்கள் பூச்சொரிய

மாங்குயிலே கட்டியமா, வண்டு கவிபாடப்
பாங்குபெறும் எக்காளம் பால்அன்றி லேமுழக்க

சந்தமணி நல்லதம்பிச் சக்கரைவேள் தான்மகிழக்
கந்தவனச் செண்பகப்பூக் காளாஞ்சி ஏந்திநிற்க

அன்ன பொழுதுதன்னுள் அன்பான வேளைஇது
என்ன மங்கை தூதுவிட்டாள் என்னக் கிளிஇசைப்ப

தாமரையி லேஅனங்கள் தான்உலவி நிற்பதெலாம்
பூமடந்தை தூதுவிட்டாற் போலேதன் பக்கல்வர

வள்ளல் இங்கே தன் வனத்தின் வண்மைதனைப்
பார்த்துநன்ருய்
உள்ளம்மகிழ்ந் தேசிறப்பாய் உற்றிருக்கும் வேளைதனில்

காமரச சஞ்சீவி

வான்உதித்த ரோகணிபோல் வாய்விளங்கப் பூதலத்துள்
தான்உதித்துக் காமரச சஞ்சீவி என்னவந்தே

நாலு வகைச்சாதி நங்கைமார் தங்களிலே
மேல்இயைபாய் முந்திவந்து மேவு பதுமினியாள்

மாரன் உயர்தீபம் மாரன் பிரதாபம்
மாரன் அணிதூபம் மாரன்மகிழ் நிட்சேபம்

மதனன்அபி ஷேகம் மதனன்அதி மோகம்
மதனன்பிர தாபம் மதனன் பணிதேகம்

தேவர்க்(கு) அரசாட்சி தேவர்க்(கு) அதிகூட்சி
தேவர்க்(கு) உயர்சாட்சி தேவர்க்(கு) ஒருகாட்சி 190

முனிவோர்க்கு ஒருசாத்ரம் முனிவோர்க்கு இருநேத்ரம்
முனிவோர்கள் சற்பாத்ரம் முனிவோர் குருசேத்ரம்

காமனுறை பூஞ்சோலை காமன்அணி பூமாலை
காமன் மகிழ்வேலை காமன் பணிவாலை

---

188 மதனகலை வாணி மதனசுர தானி
மதனரதிக் கேணி மதனசுப கல்யாணி
காமக் குருபீடம் காமக் கொலுக்கூடம்
காமக் கிரீடம்இன்பக் காமக் கடலோடம்
மாமுனிவர் வேதஅங்கம் மாமுனிவர் அந்தரங்கம்
மாமுனிவர் ஓதுசங்கம் மாமுனிவர் ப்ராணலிங்கம்
தெய்வ ரதிதேவி தெய்வ குணவாவி
தெய்வச் செழுங்காவி தெய்வமலைச் சஞ்சீவி

—கூளப்ப நாய்க்கன் காதல் : 106—109

அரம்பைதி லோத்தமையை ஆகும் உருவசியைத்
திறம்பெறச்செய் சோதனையாய்ச் செய்தும்,அதிற்
சீர்பார்த்து

சந்த்ரமதி யைச் சசியைத் தமயந்தி யைப்படைத்துச்
சிந்தை களித்துஅயனுர் செங்கை திருந்தினபின்

செய்த வருக்காணி செய்திடும்தங் கப் பதுமை
செய்த கருவூலம் செய்த தவப்பேறு

தொட்டவுடன் கன்றிஇதழ் சோராமல் பெற்றெடுத்த
கட்டழகி தன்மடியில் காமுகர்மென் மல்லிகைப்பூ

சோகைஎன்று தள்ளாமல் சுனைஎன்று விள்ளாமல்
ஏகமுடன் தித்தித் திருக்கும் இளங்கரும்பு

காய்ச்சிக் கொதியாமல் கன்றிச் சிவக்காமல்
தேய்த்துத் திரட்டாமல் தித்திக்கு நற்சீனி

ஈசல்என்றும் மோதாம லேகொம்பு அலையாமல்
ஊசலிலும் பொன்ஊசல் ஊடுலவும் நல்–தேறல்

194 சசி-இந்திராணி. அரம்பை முதலியோரைச் செய்து, சீர் பார்த்து, சந்திரமதி முதலியோரைப் படைத்து அயனுர் (-பிரமன்) கை திருந்திய பின் செய்த வருக்காணி (-ஆணி முத்தோ ?)

196 கையாற் பிடித்தொருவர் கட்டஇதழ் கன்ருமல்
மையார் குழலார் மடியிருக்கும் பூமாலை
காற்றிலடி பட்டலைந்து கண்முத் தரும்பாமல்
போற்றி மடவார் வளர்த்தெடுத்த பூங்கரும்பு
பொங்கிச் சிவந்து கறுத்துப் புழுங்காமல்
தங்கநிற மாகச் சமைந்த மணப்பாகு
மொய்த்த மலைக்காட்டு முள்ளூ டலையாமல்
மெத்தையின்மேல் ஏறி விளையாடும் தோகைமயில்

—கூ. ந. கா. 113—116

ஓங்கும் மலையேறி ஓந்திக்கு ஒளியாமல்
பாங்குபெறு பூஅணையும் பாவிக்கும் பேடைமயில்

பச்சுடம்பாய்க் கொம்புதொறும் பாய்ந்து திரியாமல்
மெச்சுமத சாத்திரத்தை விள்ளும் கிளிப்பேடு

மன்மதனுக்(கு) ஆளாய் வருந்தாமல் கூவாமல்
மன்மதனை ஆள்அடிமை செய்யவந்த மாங்குயிலாம்

வேதனையே தான்சுமந்து மேவி அலையாமல்
மாதனையார் தன்மடியில் வாழ்ந்துயர்ந்த சாதிஅன்னம்

கானில் பிறந்து கடையுண்டு அலையாமல்
வேனில் பிறந்து விலைமதியாச் சோதிமுத்து

மற்றமற்ற ரத்தினத்தை மாருக் குறைப்படுத்தி
உற்றஅதி ரூபரத்னம் உண்மையுள்ள தெய்வமணி.

கல்லில் உரையாமல் காய்ச்சி அடியாமல்
வல்லிமடி மேல்வளர்ந்த வண்மைப் பசுங்கனகம்

பொன்னுக்குப் பொன்மாலை பூவுக்குப் பூமாலை
மின்னுக்கு மின்னார்கள் மேவுகின்ற திவ்யவஸ்து

என்(று)உலவித் தான்இருக்கும் ஏகாந்த வேளைதனில்
நன்(று)உரைக்கும் மெய்ப்பாங்கி நாயகத்தைத்
தான்பார்த்து

ஓங்குமலைக் காட்டின் உள்ளிருந்து தூங்காமல்
தூங்குசப்ர மஞ்சமிசைத் தூங்கும் நவரசத்தேன்
கொஞ்சி மொழிகுழறிக் கூட்டிற் கிடவாமல்
செஞ்சொல் மதனகலை செப்பும் கிளிப்பேடு
கொம்புதொறும் போய்த்தாவிக் கூவித் திரியாமல்
அம்பொன்மணி ஊசலிருந்து ஆடும் குயிற்பேடு

—கூ. நா. கா. 117—119

இடந் துடித்தல்

ஏதோ இடக்கண் இடதுதோ ளும் துடிக்குது
ஓதாய் வனிதாய்நீ உற்றமொழி சொல்லும் என்ருள்

மாதர்க்கு இடப்பாகம் மாந்தர்க்குத் தான் வலப்பால்
ஓதற்(கு) அரியதென உண்மையுள்ள சோதிடர்கள்

ஏற்க உரைப்பதனுல் ஏந்திழையே இன்றுஉமக்குத்
தீர்க்கசுப கல்யாணம் சீராகக் கூடும்என்ருள்

தாதி மொழிகேட்டுச் சற்றே நகைபுரிந்துஅங்கு
ஓதியநல் தோழியர்கள் உள்ளபேர் தான்சூழ

பூங்காவிற் சென்றுமலர்ப் பூஎடுக்க வேணும்என்று
பாங்காய் உரைக்கல்உற்ருள் பவளவாய் முத்தரும்ப

அழகுக்கு அழகு செயல்

பொன்பொடியோ டே சுகந்தம்
போட்டரைத்த கொச்சிமஞ்சள்
அன்பாய்க் குளித்த அருமைத் திருமேனி

எங்கும்சவ் வாதுகதம் பம்பூசி யே, இடைக்குக்
கொங்கை இலங்கநல்ல கோலவர்ணப் பட்டுடுத்தி

கூந்தல் வகுப்புஎடுத்துக் கோதிக் குழல்முடித்துப்
பாந்தமிகு கொண்டையின்மேல்
பதித்த இரேக்(கு) அணிந்து

நெற்றிக்குச் சுட்டிகட்டி நீறணிந்து சிந்துரம்இட்(டு)
அத்ரவிழிக்கு மையிட்(டு) அழகுஎழுதி வார்முலேக்கு

நாடும் இணேக்குழையில் ரத்னம்இட்ட பொன்ஓலே
சூடிஒளிர் வாளியிட்டுத் துலங்கப் பிறை அணிந்து

பொற்சரிகைக் கச்சணிந்து பொன்உருட்டுக் காரையுடன்
நற்சவடி முத்(து)அலங்கல் நாகமணித் தாழ்வடமும்

மார்புக்(கு) இசைந்திலங்கு மாருடிச் செம்பவளத்
தார்அணிந்து கந்தரத்தைத் தகுசரங்க ளால் மறைத்தார்

எள்ளிளம்பூ வில்கோத்த விண்நீர்த் துளி எனவே
விள்ளும் முகம்இலங்க மின்னும்மூக் குத்தி இட்டு

தங்கத்தா யத்துத் தளதளெனப் பொன்சரிகள்
செங்கைக் கடகமுடன் சீர்மோ திரங்கள்இட்டு

வச்ர முகப்பழுத்தி வைத்தபசும் பொன்அரைஞாண்
உச்சிதப்பட் டாடையின்மேல்
ஒளிரும் ஒட்டியாணமுடன்

பஞ்சடியின் தன்விரல்கள் பத்துக்கும் பொன்அணிந்து
அஞ்சம்புத் தூணியின்காற்(கு)
ஆர்த்ததண்டை பொற்சதங்கை

பாதசரம் கிண்கிணிபொன் பாடகம்இட் டார், மாரன்
மாதழகில் மாள வகைவகையாய்ப் பூண்அணிந்து 225

கண்ணின்மணி யாகவந்த காமரச சஞ்சீவி
நண்ணிமலர் கொய்யஎன்று நாடி நடக்கலுற்ருள்

பாங்கியர்

விந்தைமுக மாதுரத்னம் மெய்ப்பாங்கி நாயகத்தோ(டு)
அந்தமிகு காமவல்லி அஞ்சுகப்பெண் ணுர்அழகி

நாரியர்கள் வஞ்சிபொன்னி
நல்லவல்லி செண்பகப்பெண்
வீரிஅனு போகசித்தி மென்கைஉல் லாசமங்கை

சுந்தரம்கட் டாணிமுத்துச் சூழ்விந்தைத் தோழியரும்
கந்தமலர் எடுக்கக் காவனத்தின் உட் புகுந்தார்

மலர் பறித்தல்

பூஎடுக்கக் கைநெகிழும் போது கமலம் என்றே
நாஎடுத்து வண்டுஅமுதம் நாடிஉண்ண வந்துழலும்

கண்டுஇதழை மாதளம்பூக் காணும்என ஓடிவந்த
வண்டுஇதழின் தேன்அருந்த வைகாம லேசுழலும்

நீடிஇந்தப் பெண்அரசி நின்றுஇங்கே பூஎடுக்கச்
சேடியரும் அங்கங்கே சென்றுசென்று பூஎடுத்தார்

மைவரும் கண்மாதர் மன்மதனுக்(கு) எந்நாளும்
எய்வதற்குப் பாணம்இனி இல்லை எனப்பறித்தார்

பேதையர்கள் எல்லாம் பிரிந்து மலர்எடுக்கக்
கோதை அனக்கூட்டம் கூடாத பேடனம்போல்

தானே ஒருத்தியுமாய்ச் சாதிசா மந்திபிச்சி
தேனேசெவ் வந்திமலர் செங்கொன்றைப் பூஎடுத்தாள்

பூங்கொடிப்பூ நீர்ப்பூ புதர்ப்பூ முதல்எடுத்தே
அங்கோட்டுப் பூவுக்கு அரிவை மயல்ஆனுள்

அங்கம்எல்லாம் பூவாய் அலர்ந்துகசங் காதிருக்கச்
செங்கமலப் பூவேதன் சீர்அடிக்கு ளாய்வணங்க

பாரில் திருவாள் பரதேசம் போனுற்போல்
தாருவிடம் சென்றுசென்று தப்பாமற் சஞ்சரித்து

செண்பகமே பாதிரியே சீரார்ந்த பூமரமே
நண்பகமே தான்குளிர நல்லமலர் தாரீரோ

மகிழேநல் கற்பகமே மாமரமே நன்ருய்
மகிழே புரிவதற்கு வண்ணமலர் தாரீரோ

புன்னையே கந்தரமே பூஇனமே கேதகையே
என்னையே பார்த்துஇரங்கி இன்பமலர் தாரீரோ

---

239 சாதிநறும் சண்பகமே தாதுளபூந் தாதகியே
கோதிக் குழல்முடிக்கக் கோலமலர் தாரீரோ
மந்தாரை யேசெருந்தி மாமரமே நீர்எனது
சந்தாபந் தீரத் தரிக்கமலர் தாரீரோ

—கூ. நா. கா. 157-158

மாதுளையே தாழை மரமே வளைந்துஎனக்குப்
போது அணைய வந்துமது பூவைஎலாம் தான்கொடுமே

மந்தாரை யேஉன் மலரையெலாம் தான்கொடுத்தால்
தந்தாரை நான்புகழ்ந்து தாவிமலர் சூட்டேனே

மாங்குயில்காள் வண்டினங்காள் மாடப் புருஇனங்காள்
பூங்கிளிகாள் நீர்ஏனும் பூப்பறித்துத் தாரீரோ

ஓங்கி வளர்மரத்தில் உற்ற மலர்பறித்துப்
பாங்குபெற இன்(று)எனக்குப் பட்சிகாள் தாரீரோ

பூங்குழற்கு வண்டு புறம்போக, வாய்உரைகண்(டு)
ஏங்கிக் குயில்மறைய வேபசலை யாம்கிளிகள்

பொன்நாட்டு மாதொருத்தி பூஎடுக்க வந்ததைப்போல்
மின்னார் வனத்தூடே மெல்லி தனித்துநின்றாள்

காட்சி

பூசா பலமடந்தை பூரித்து உலவிநிற்க
ராசாதி ராசன்எங்கள் நல்லதம்பிச் சக்கரைவேள்

தண்ணாரும் பூங்காவில் தான்இருந்த என்கோமான்
கண்ணாரக் கண்டு கனசோக மாய்த்தெளிந்தான்

ஐயம்

இந்த்ராணி யோமலர்வாழ் இந்திரையோ ரோகணியோ
கந்தருவர் ஈன்றெடுத்த கன்னியோ தாரகையோ

பாதிரியே காவிற்பனிநீர்ப் பருமரமே
மாதவியே நீர்எனக்கு வண்ணமலர் தாரீரோ
விண்ணார்ந்த புன்னை விருட்சமே குங்குமமே
அண்ணாந்து நிற்குமெனக் கானமலர் தாரீரோ
அம்பிட்ட கண்ணார் அகன்றுவிட்டார் உங்களைநான்
கும்பிட்டேன் கோகிலங்காள் கொய்துமலர் தாரீரோ

– கூ.நா.கா. 159-161.

துணிவு

ஆங்கவர்கள் கண்இமையார் ஆனதினுல் பூவுலகில்
ஓங்கியஇ ராசகன்னி ஒக்கும்இவள் என்றுசொலி

அன்னமவள் காதில் அமிர்தம் பொழிந்தாற்போல்
மன்னன் உரைத்தருள்வான் மாது மனம்குளிர

உற்றவா(று) ஏதுநா டேதுபதி ஏதுஉமைப்
பெற்றமக ராசிஎவள் பேர்ஏது சொல்லும் என்ருன்

நலம் பாராட்டல்

விண்டுபண்டு கல்லை மிதிக்கஒரு பெண்உருவம்
கொண்(டு)உலவி வந்துநின்ற கோதைமயில் நீர்தாமோ

கள்என்றும் சந்தனுமன்
காதல்கொள அன்று கங்கைக்(கு)
உள்ளே இருந்துவந்த ஓவியமும் நீர்தாமோ

மின்உருக்கு மாங்கதன்தன் மெய்விரதம் தான்அழிக்க
முன்உலகில் வந்ததெய்வ மோகினியும் நீர்தாமோ

பெண்படையும் அம்மலராய்ப் பேதலித்த மன்மதனை
நண்புஅடையச் செய்யாமல்
நாண்அடையச் செய்தவரோ

கேசாதி பாதம்

நின்னுடைய கூந்தல் நிறம்அருள வேணும்என்று
மன்னும்முகில் வாசவனை வாகனமாய்த் தாங்கியதே

வட்டமதி நின்நுதல்மேல் வந்திருந்தால் கண்நுதலோன்
இட்ட சடைக்கணிந்த(து) எந்தமதி காணேனே

---

254 அகலிகை 256 உருக்குமாங்கதன் 258 வாசவன்-இந்திரன்

260 மால் திருமால்;....விடம், வண்டு இரண்டும் கண்ணுக்கு உவமையாய் விளங்குதல் போல் திருமாலும் மீனய் அவதரித்தாலும்............மிகச்சப்பை !

கண்ணுக்(கு) உவமை கடுவிடம்சேல் வண்(டு)எனவே
நண்ணி உரைப்பதில்மால் நாம்உவமை ஆகஎன்றே

ஆனான்மச் சமதாய், ஆலம் அரன்மிடற்றுள்
தானாய், அளிமதனன் சாபத்துள் ஆகியதே

காச்சியம் பட்டதுவேல் காண்மதிமான் என்றுரைக்கில்
வாய்ச்சபெயர் தன்னை மறிஎன்று உரைத்தாரே

பைந்தனுவு நல்புருவப் பான்மைஎன்றால் ஆங்கதுவும்
நொந்து, புற்றி லேஉறைந்து நொய்தாய் மறுகிடுமே

செண்பகப்பூ மீதிருந்து செம்மா தளைப்பூமேல்
நண்புபுரி மின்மினிபோல் ரத்தினம்மூக் குத்தியதோ

கண்ணாடி போலக் கபோலம்என்று நான்உரைத்தால்
பண்ணார்ந்த முத்தம்அது பாவிக்க மாட்டாதே

வாள்குழையை வள்ளைஎன்றால்
மதனகலைக் யானம்எல்லாம்
கேள்வியுற்ற கேண்மைதனைக் கேட்டறிய மாட்டாதே

முத்து நகைக்குவமை முல்லை அரும்புஎனிலோ
பத்தி ஒழுங்காய்ப் படர்சிவப்பைக் காணோமே

கந்தரத்தைக் கந்தரம்என்று ஓதினால் இங்குஇனியும்
சுந்தரத்தின் ஆபரணம் தோய்ந்து மறையாதே

வளையாக் கழையைஉங்கள்
வாழ்புயத்துக்கு ஒப்புரைத்தால்
குழையா(து) அழுத்தும் குறிப்பும் பதியாதே

செவ்வாய்க் கிளியேஉன் சீர்வதனம் திங்கள்என்றால்
ஒவ்வாதே. செங்கமலம் ஒக்குமோ கையினுக்கு

செய்ய பவளம் சிறுவிரல்என் றேஉரைத்தால்
மெய்யினில் ரேகைசெய்ய வேண்டும் முனைஇலையே

மேரைச் சினந்துமற்றை வெற்பைஎல்லாம் தான்நூக்கி
வாரைக் கிழித்துஇளநீர் மாவனத்தைத் தோப்பாக்கி

தந்திமருப் பைச்சிமிழைத் தாளம் தனைக் கடைசெய்—
துந், திரண்ட பொற்குடத்தை ஓட உருட்டிவிட்டே

சூதைத் தகர்த்துமதன் சூழ்மவுலி யைத்துலைத்துட்
போதைக் கமலம்என்ற பூவைக் கயத்தமிழ்த்தி

கோங்குஅரும்பைத் தீங்கரும்பாய்க்
கொண்டு கவித்துலவித்
தாங்கிப் புடைத்தெழுந்து தானே சரியாகி 275

பாரித் தெழுந்த பணைமுலைக்கு நான்உவமை
பூரித்துரைக்க என்றால் பூஉலகிற் காணேனே

மாமுலையிற் கண்கறுப்பு வயிறுஆலின் உந்திஒழுங்—
கேமுளைத்த செங்கமலத்து ஏறிஉண்ட வண்டோதான்

நூலோ கொடியோ நுடங்குஇடைதான் மின்னல்அது
போலே முலையும் பொருதேநின் சிற்றிடைக்கு

மான்குழம்பு பொன்ஆல வட்டம் பலாச்சுளைக்குள்
தேன்குழம்பு விட்டதுபோற் செங்கமல மோதிதம்பம்

---

276 பாவின்இயல் கண்டுபல பாடித் தெரிந்துபெருங்
காவியத்தைப் பாடிக் கவிஞர்அரங் கேற்றுதல்போல்
முந்தச் செழுங்கமலத் துள்ளே முளைத் தெழுந்தோன்,
தந்தச் சிமிழ்படைத்துத் தாளவட்டம் தான்படைத்து
வம்பைச் சமைத்துக் குணம்சற் றதில்அறிந்து,
தேங்காயைச் செய்து திரட்சிகண்டு, பொற்குடத்தைப்
பாங்காகச் செய்து பணைப்பதிலே கண்டறிந்து
விந்தைதரு மேருமுதல் வெற்பெல்லாம் செய்தவன் கை
வந்ததற்பின் உங்கள் வனமுலையைச் செய்தானே
கூ. நா. கா. 191-195

ஈனாத வாழை இருதொடைக ளோமுழந்தாள்
கோனா அலவன்என்று கூறினா லும்சரியோ

செய்ய கணைக்காலைச் செப்புவரால் என்றுரைத்தால்
துய்யபசும் பொன்இணையாய்ச்
சொல்நயத்தைக் கூறுதலாம்

செம்பஞ்(சு) அடியும்உந்தன் சீர்அடியும் கண்டுமதன்
அம்பஞ்(சு) அடியில்வைத்தே
அட்டாங்கம் செய்தானே

சித்தம் இரங்காயோ

நன்சேனையைப்பிரிந்து நான்வரவும், பூவனத்தில்
நின்சேனையைப்பிரிந்து நீதனித்து நிற்பதுதான்

என்னபூ சாபலமோ ஏதுநான் செய்தவமோ
சொன்ன கவுளியொடு தோன்றுசகு னப்பலனே

ஒன்றும் உரையாமல் ஓவியம்போ லேஇருந்தீர்
இன்றுமது சித்தம் இரங்காத வல்லிரும்போ

* * * * *

கான்ஏறி ஏக,வலை கட்டாமல் ஓடாமல்
தானே வரும்மானைச் சந்தித்து அகல்வாரோ

நாடிமிக வேமெலிந்து நாள்தோறு மே வாடித்
தேடியபொன் காலில்வந்து செத்தால் விடுவாரோ

காசினிமா தைப் பிரியாக் காமுகர்க்குத் தெய்வகன்னி
பேசிஎதிர் வந்துநின்றால் பின்விட் டகல்வாரோ

---

317 ஓடிவலை கட்டி ஒதுக்காம லேஎளிதில்
நாடிய பொன்மானை நான்விட் டகல்வேனே
தாப்பான காடும் தடவரையும் சுற்றாமல்
வாய்ப்பாக வந்த மயிலைவிட்டுப் போவேனே

கூ. நா. கா. 249-250

மென்மேல்நான் சொல்மொழிக்கு
வேறென்றும் பேசாதால்
என்மீதில் அன்பிருக்கு தென்றுகண்டு கொண்டேனே

இத்தனைநான் கூற இரங்கா திருந்தால்உன்
சித்தம் அவா நடந்து சேராமல் போவேனோ

ஆனால் உனைநான் அகன்(று) இனிமேல் அப்பாலே
போனாலும் எந்தனைத்தான் பூவையர்கள் ஏசாரோ 320

காந்தருவ மணம்

கேளீரோ தெய்வமின்னார் கேட்டஉட னேஇரங்கித்
தோள்ஈந்து சேருவதே சுபசோ பனமாகும்

கோதை இராதைதனைக் கோபாலன் கூடியதும்
வேதன் உருவசியை மெய்கலந்து சேர்ந்ததுவும்

பெற்றார் அறிந்தாரோ பின்ஒருவர் கண்டாரோ
ஒத்தால் இருவர் ஒருவர்வர வேண்டுவது ஏன்

காரைஊ ருங்கூந்தற் கன்னிகையே என்தனைத்தான்
காரையூர் வேந்தன்என்று கண்டும் அறிந்திலையே

காங்கய நாடனும்நான் காமரச சஞ்சீவி
நீங்கள்என்றால் அட்டிஎன்ன நேசம்அது வே சமையம்

அந்நாள்சஞ் சீவி அனுமன் கொணர்ந்ததுபோல்
இந்நாள்என் காமரச சஞ்சீவி என்றுவந்தாய்

என்ன, கொடுப்பதற்கே எண்ணிஇருப் பார்கள்தங்கள்
முன்அதனில் நின்ற முறைமை அதுபோல,

மெள்ள மலர்க்கைதொட, விம்மிஉடல் கம்எனவே
கொள்ளும் மகிழ்ச்சிகளுள் கொண்டுபூ ரித்தனளே

நாமம்அதிற் கனம்சேர் நல்லதம்பிச் சக்கரைவேள்
காமரச சஞ்சீவி என்னும்அந்தக் கன்னிகையும்

சாதிஇரு வாட்சி புன்னை சாற்றுமுல்லை மல்லிகையே
மோதிப் படர்ந்த முழுமலர்ப்பூ மணப்பந்தர்

தாலம்அது தோற்றுமலர் தான்சொரிந்த பூவணைமேல்
மாலும் திருவும் மதன்இரதி போல் இருந்தார்

பாக்குஇலைக ளேஅருந்திப் பாங்குபெற முத்தம் இட்டுத்
தேக்கும் உவகையொடு செங்கைஆ ரத்தழுவி

கொவ்வை இதழ்அருந்திக் கும்ப நகில்பிடித்துச்
செவ்விதென வேஅணிந்த செம்பட் டை நெகிழ்த்து

அங்கே கரிகரம்செய்து ஆலிங்கன விதத்தின்
சங்கதி யாய்க்கரணம் தப்பாமலே நடத்தி

கைமாறு செய்வதுபோற் கன்னிதொழில் விதங்கள்
செய்துபரி பாராட்டச் சிந்தைமிகத் துணிந்தாள்

சந்தநல வாசனைத யங்குமுலை யூடுநகம்
முந்திஉற மாலைகள்மு யங்கிமல ரும்சரிய

தண்டள மும்திகழ் தனம்கன புயம்பதிய
விண்டுநிக ரும்குழலில் மிஞ்சுமலரும் சிதற

எத்தனைவி தத்தொழில் இதத்தொடுந டத்தி, ஒரு
மித்துஉடல்வி யர்த்துருகி மெய்ச்சலதி மொய்த்துவிழ

தாடனவி சேடஒலி தான்உற வாய்வெருவி
நாடுமிட றூடுமயில் காடைகுரல் ஓசைதர

நானும்ஒன் று நீயும்ஒன்றே நாளும்இந்த வாய்மைநம்பு
தான்இரண்டு போகமும்ச மானம்என்ற போகம்வந்து

பார்க்குள் சுகபோகம் பாலிக்கும் சையோகம்
யார்க்கும் கிடையா அவரூப சம்போகம்

ஆவியொன்று கூடிரண்டு ஆசையொன்று நேச மொன்று
மேவுசம்ப்ர தாயமொன்று வேளைஇந்த்ர போகம் வந்து

தான்பெருகி மோகம் தணிந்துசுனை நீர்அளைந்து
மேன்மை யுடன்இருவர் வீற்றிருக்கும் வேளைதனில்

பரிவாரங்கள் தேடி வரல்

மானைத் தொடர்ந்துவந்த மாரன்அடி யின்பிறகே
சேனைத் தளங்கள்எல்லாம் சென்றங்கே மொய்த்துவர

பெற்றவரை நாடிவரும் பிள்ளையைப்போல் தன்சேனை
முற்றும் கடல்போல் முழங்கிமலர்க்கா எடுத்த

சொற்காது கேட்டுத் துணுக்கென் றெழுந்திருந்து
நற்காமன் என்னவந்த நல்லதம்பிச் சக்கரைவேள் 345

பொன்உலகம் விட்டுவந்த பூவைதனை அங்கிருத்தி
மன்னன் தளம்அதனை வந்துகண்டான் அந்நேரம்

தன்னூர் மீளல்

பூங்காவி லே இருந்து பூமன்வரக் கண்டவர்கள்
பாங்காக மாரிகண்ட பைம்பயிர்போல் ஆகினரே

நற்சிலைக்கை அர்ச்சுனனும் நல்லதம்பிச் சக்கரைவேள்
பொற்சிவிகை ஏறிஅந்தப் பூங்கானம் விட்டகன்றுன்

முன்அணியும் பின்அணியும் மோதிஇரு பாலும்வரக்
கன்னன்அள கைப்பதியோன் காரைப் பதிநாடி

சேர்ந்து சயங்கொண்ட நாதரையும் தேன்துளிகள்
வாய்ந்தருளும் செம்பவள வல்லிநல்ல மங்கையம்மாள்

தன்பதமும் ஆனூரில் தாய்பதமும் நல்லாண்டார்
பொன்பதமும் தெண்டன்இட்டுப் பூதி தரஅணிந்து

மாலைபெற்றுத் தீர்த்தம் வழங்க மகிழ்ச்சிபெற்று
மாலையிட்ட மாலைவைத்து மால்யானை மீதுஏறி

அந்தஅனு போகபர மானந்த சம்போகம்
தந்த சுக போகம் சரிபோகமாய்ப் பெருக.

கூ. நா. கா. 270-71

பட்டணப் பிரவேசம்

சோடுநகார் பேரிகையும் துந்தும்இட மானமுடன்
நாடுதவில் டண்டண்ட ஞஎனஅங்(கு) ஓசைஎழ

வித்தார நாகசுரம் மெய்ப்பூ ரிகைதாரை
துத்தாரி ஆயகுழல் துத்தாரித் தாஎனவே

மத்தளம்கைத் தாளமுடன் வண்மைநரப் புக்கருவி
தித்திதரும் மெய்க்கருவி சேர்ந்திடுகஞ் சக்கருவி

பஞ்சக் கருவி பலவாத் தியமு ழங்கக்
கொஞ்சிப் பரத்தையர்கள் கூடி நடம்புரிய

பட்டுகட்டியர்கள் நின்று பண்புடனே பத்தியங்கள்
கட்டுகட்டாய் எச்சரிக்கை கைநீட்டி யேபகர

தண்டையிடு வார்கள் மிண்டா
சதுராஉத் தண்டர் கண்டா
விண்டைஒத்த உத்தமக்கா மிண்டா சண்டைப்ரசண்டா

பாந்தமிகு வெள்ளாளா பாங்குபெறு பூபாலா
காந்தையர்கள் மாமோகா காங்கயநான் நாடாளா

உரகவாய் ரத்னமணி உலகு வாணர்க்குதவு
பரிவுளாய், ஏற்றமிகு பவுதைஆ னூர்க்கதிபா

மீதெதிர்த்த பேரைவெட்டி வீறுபெற்று வாழ்புகழ்ச்சி
பூதலத்தி லேநிறுத்து போசஉக்ர வீரபத்ர

காரைப் பழித்துஉதவு காரைப் பதிக்குஅரசு
மேரைப் பணைத்தபுய மேழிக் கொடிக்குஅதிப

சீனர்கொங்கர் சூழ்கலிங்கர் சேர்குலிங்கர் தேவசங்கர்
தான் இறைஞ்சு தாள்இலங்கு சாமிஇந்த்ர தேவசங்கர்

காந்தன், சிவமலையான் காங்கயன்பொன் தாள்பணியும்
வேந்தன்எட்டுத் திக்கினுக்கும்
மேவுசொட்டைக் காரர்கண்டா

தந்தியின்மேற் கொண்டுலவு சாமீ பராக்எனவே
பந்திபந்தி யாக்கவரி பக்கக் குடை நிழற்ற

பொற்குடைமுத் துக்கவிகை பூச்சக் கரர்கவிகை
நற்பவளத் தின்கவிகை நாலுவர்னப் பாவாடை

வாரணடால் பச்சைடால் மாமகர டால்அரிடால்
தாரணிமெச் சும்வசவ சங்கரடால் நின்றிலக

மின்னும் புவியில்இந்த வீரர் துவசம் எல்லாம்
தன்னுள்அடக் கிவைத்துத் தானுயர்மே ழித்துவசன்

வானை எட்டி யேநடக்க வாள்கயத்தை வால்சுருட்டி
மேனைஒக்க ஓடவிட்டு வீசிஇட்ட மாய்நடக்க

இந்தப் படிகோமான் இயல்பாய் வரும்போது
சுந்தரம்சேர் மின்னார் துலங்கு கலைசோர

மெய்சோர்ந்து நின்று விழுவார் சிலர் சிலர்கள்
கைசோர்ந்து மாலாய்க் கரைவார் சிலமடவார்

மாலாற்றி என்றுசொல வந்து சிலமடவார்
ஆலாத்தி ஏந்தி அருகில்வந்து நிற்பாரும்

மைஏந்து கண்ணியர்வேள் மாலைநமக்கு ஈவன்என்று
கைஏந்தி அங்கே கருத்துருகி நிற்பாரும்

என்வாயில் முத்தம்அருள் என்று சிலமடவார்
தன்வாயில் இதழ்குவித்துத்
தான்முயங்கி முத்திகொள்வார்

நாமான் மனத்திருக்க நன்மலர்மான் மார்பிருக்கக்
கோமான்என் சீமான் குணம்என்றே, புல்மானைக்

காட்டுள் தொடர்ந்தோடிக் கன்னிமான் சேர்ந்ததுரை
நாட்டுள்வந்த மானைஎல்லாம் நாடிஎதிர் நோக்காமல்

காமன் அபி ராமன் காராள கோத்ரமுகில்
பூமாது தான்உலவப் பொன்மா ளிகைசேர்ந்தான்

வந்ததற்பின் சட்டிரச வர்க்க அமுதருந்தி
இந்திரன்போற் சப்ரமஞ்சத் தேறி இனிதிருந்தான்

தலைவி தவித்தல்

இவ்வாறு நல்லதம்பிச் சக்கரைவேள் இங்கிருக்கச்
செவ்வாய் இதழ்மயிலாம் தேன்அனைய சஞ்சீவி

நன்னயஉத் தண்டமுகில் நல்லதம்பிச் சக்கரைவேள்
இன்னம் வரவிலையே ஏன்தா மசம்எனவே 380

பார்த்தாள் எழுந்திருந்தாள் பக்கம்அதிற் காணுமல்
வேர்த்தாள் உடல்மறந்தாள்
மெய்சோர்ந்து அறிவயர்ந்தாள்

உன்னிவனம் எங்கணும்தான் ஓடிஅங்கும் காணுமல்
பொன்அடியைக் கண்ணுள்ஒற்றிப்
போற்றிமிக நெட்டுயிர்த்தாள்

மோடிஎன்ன என்மேல் முனிவோஎன் ருள்வேளை
நாடிவந்து சூழ்அனங்கன் நாலுகணை யும்தொடுத்தான்

அம்புதைத்த வெண்பிடிபோ லாய்மெலிந்தாள் பந்துமுலை
யும்பதைக்கப் பூவாளிக்(கு) உள்ளம் உருகுவதே

கண்ணீர் சொரிந்துநின்று கண்ணுறு போற்பெருகி
வண்ணமிகு வாய்க்காலுள் வந்துநின்று தான்இரங்கி

அந்தக் கமுகினைவிட்(டு) ஆர்ந்த கரும்பினுட்பாய்ந்
துந்த மரைக் காட்டுக் குங்கதலி ஊடோட

ஆற்ருது அரற்றுதல்

ஓதமையே வாதுகளே ஓங்குமர மே புனையே
மாதுளையே என்னுசை மாப்பிளையைக் காணீரோ

பூவனமே செண்பகமே பூங்கொடியே மாங்கனியே
காவலரே என்னுடைக் காவலரைக் காணீரோ

பொன்னூரும் வண்டினமே பூங்கிளியே புல் அருந்தும்
பன்னுவே என்னுடைப் பத்தாவைக் காணீரோ

தேன்துளிக்கும் வாய்மலர்ந்து
சேர்ந்தணைந்த வேள் எனக்குத்
தோன்றும் உறுதி உண்மை சொல்லாமற் போவாரோ

பூங்காவில் நான் தனித்துப் பூ எடுக்கு மாறுகண்டு
நீங்காப் பரமன்என்னை நெஞ்சுருகிச் சேர்ந்தானே

நற்கமலக் கண்முகுந்தன் நாடிஎதிர் வந்துநின்று
சர்க்கரைபோல் வார்த்தைசொலித்
தான்மயக்கிச் சேர்ந்தானே

அன்ன பரமன்என்றால் அஞ்சு தலைஇலையே
சொன்ன முகுந்தன்என்றால் தூயமுகில் மேனிஎங்கே

அஞ்சுதலை இல்லாமல் ஆறுதலை வைத்ததுவும்
மிஞ்சுபுகழ் காரையூர் மெய்யன்அல்லால் வேறிலையே

சங்கநிதி நல்லதம்பிச் சக்கரைமன் றாடிவள்ளல்
வங்கணமாய்ச் சேர்ந்ததினால் வராது இனித்துயரே 395

நாகவல்லி நிட்டூரம் நாடிற்றே சர்க்கரையைப்
பாகம்உறச் சேர்ந்தவட்குப் பன்னாளும் கைப்பிலையே

வாதோ இதுசூதோ வன்மமோ நான் அறியேன்
ஏதோ கவடோ எனையும் பிரிவாரோ

செய்ய திருவழகைச் சித்திரத்தி லேஎழுதி
மைவிழியுட் சேர்க்கஎன்றால் வண்மை எழுதுவனே

ஐயன் புருவத் தழகை எழுதுகினும்
பைய இமைக்கும் பண்பை எழுதுவனே

வானமதி போல்உற்ற வதனம் எழுதுகினும்
தேன் அது போல் வார்த்தைசொலும்
தித்திப் பெழுதுவனே

காமன் அனையபுயம் கண்டுஎழுதி னுல்அழகுத்
தேமல் தனைஎழுதிச் செப்புதற்கு வாராதே

சல்லாபம் தீரத் தழுவுகரம் தான்எழுதின்
உல்லாசக் கைவீச்சு ஒழுங்கெழுத வாராதே

நண்ணிநமைச் சேர்ந்தகன்னி நாடித் திரும்பமனத்து
எண்ணுவள்என்று எண்ணுமல்
ஏய்த்திருக்க மாட்டானே

என்னைத் தனிஇருத்தி ஏகுவன் என்றிருந்தால்
நன்னயமாய்க் கைக்குமெய்யாய்
நம்பிக்கை கொள்ளேனே

ஊருகேட் டேஅவன்பின் ஓடுவோம் என்ருலும்
காரையூர் என்றுசொலிக் காதல்மிகச் சொன்னனே

பாரினில் ஆண் அன்றில் பட்சி பிரிந்ததுபோல்
நேர்பிரிந்து மின்னுள் நினைவுஒய்ந்தங் கேபடுத்தாள்

பாங்கியர் காணல்

ஈங்குஈண்டு இவள்இருக்க எங்கணும்தான் காணமற்
பூங்காவிற் பூஎடுத்த பூவையர்கள் எல்லோரும்

நின்று திகைத்தார் நெடுமூச்சுத் தான்எறிந்தார்
கன்று மனம்உழன்ருர் கன்னியரைக் கண்டுஅன்னை

வாரானை யேநினைத்து வஞ்சியும்முன் தானைவிரித்(து)
ஈரானை யேதெரிய ஏங்கிக் கிடப்பதனைப்

பாங்கியர்கள் கண்டு பதறித் தரியாமல்
ஈங்குஇப் படியிருக்க என்னஎன்று தான்உரைத்தார்

ஒக்கஎமைக் காண உருக்கமோ நித்திரையோ
சர்க்கரைபால் இல்லாத தாபமோ தாழ்வேதோ

என்னகுறை என்னகதை என்னஇது என்னஎனக்
கன்னி துகில்இறுக்கிக் கட்டி எடுத்தணைத்து

பூங்கொத்தால் வீசிமுகம்
பொன்உடம்பில் வேர்வுஅகற்ற
ஆங்குதெளியாது ஆகம்நொந்து தான்இருந்தாள்

பந்து முலைக்குறியும் பவள இதழ்க்குறியும்
இந்த உடற்குறியும் ஏதென்று கைநெறித்தார்

நாஉளறி வாய்உலர்ந்து நாடும் முகம்கறுவி
மேவும்உயிர்ப் பாங்கியர்கள் மெத்தவிரு மித்துநின்றார்

மனை சேர்தல்

மெய்லா கிரிஅதுவே மேற்கொண்டு மின்னாளைக்
கைலாகு கொண்டுசென்று கன்னி மனைபுகுந்தார்

ஆதித்தன் மேல்பால் அடைந்தான். மதி, துயரைச்
சாதித் தனம்வருந்தத் தான்குணபால் தோன்றினனே

மெல்அணையுள் சேர்த்ததற்பின் மேவு துயில்
அமர்ந்தாள்
சொல்அமுதம் இன்றி, வளை சோர்ந்து மதிமறந்தாள்

மெய்உருகி வெய்யில்இடும் வெண்ணெய் அதுபோல
மையுருகக் கண்ணீர் வடிந்துகரைந் தோடியதே

புலம்பல்

பன்னீர் விசிறிகொண்டு பாங்கியர்கள் எல்லோரும்
மென்னீரைப் பொன்மேனி மென்மேலு மேவீச 420

மாது மனம்கொதித்து வார்த்தைசொலிப்
பன்னீர்என்(று)
ஓதுகொதி வெந்நீரை ஊடு தெளித்தீரோ

தேறும் அழல்சாற்றைச் சீதச்சாறு என்றுவிட்டு
மாறுசெய்தீ ரேதாறு மாறும் பிடித்தீரோ

பொன்கம்பி காய்ச்சிப் புலிங்கம்அதில் கோர்வையிட்டு
என்கழுத்தில் முத்துஅலங்கல் என்றும் அணிந்தீரோ

வான்மதியும் காயும் வகைக்கோஅச் சாளரவாய்
தான்திறந்து வைத்தீர் சதிகாரர் ஆனீரோ

கொங்கைமத யானையின்மேல்
கொம்புருகிப் பாயஎன்றே
கங்குல்எனும் யானைதனைக் கட்டவிழ்த்து விட்டீரோ

பாவிமதன் அம்பைப் பறித்துவந்து புஷ்பம்என
மேவு மலர்அணையுள் மெத்தை விரித்தீரோ

கொங்கையின்மேற் பூசும் குளிர்சீத சந்தனமும்
இங்கனலே. பாயசமும் என்போல் இருக்குதென்றல்

கண்டு பழம்சர்க் கரைபால் பருகினர்முன்
விண்டுஎட்டிப் பழச்சாறு
வேண்டும்என்ற தொக்கும்என்றாள்

என்றுரைத்(து)இங்(கு) இவ்வாறு
இவ்வார்த்தை சேடியர்கள்
சென்(று)அனைக்குத் தான்பகரச்
சீக்கிரம்அங்கு ஓடிவந்தாள்

தாய் வினவுதல்

அப்பொழுது தன்தாயார் ஆராய்ந்து தான்பார்த்துச்
செப்புமுலை மேற்குறியும் செவ்வாய் இதழ்க்குறியும்

கண்டாள்பின் போனவரைக் கண்சிவந்து பூசல்இட்டுக்
கொண்டாள் உடலம் கொதித்தாள்கி லேசம்உற்றாள்

தங்கள் மனதுஅறியாப் பொய்உண்டோ தார்வனத்தில்
உங்களைக்கா ணுதொருவர் உற்றணைந்த சேதிசொல்வீர்

வேண்டும் மலர்எடுக்க வெவ்வேறாய்ப் பாங்கியர்கள்
தாண்டி அகன்றதுவும் தையல் தனித்ததுவும்

மின்அனையார் தாம்உரைக்க
மெய்ப்பாங்கி நாயகப்பெண்
பின்அங்கு உரைத்தாள் பிரிந்துநாம் போனதற்பின்
யார்வந்தார் என்றுசுற்றி
யான்அடிபார்த் தேன் அதிலோர்
சீரில் இந்த்ர ரேகையுடன் சேர்பதும ரேகைகண்டேன்
தாரைச் சுவடுகண்ட தன்றித் தருவைநிகர்
காரைப் பதிஉறையும் காராளன் என்னவந்த
நல்லதம்பிச் சக்கரைவேள் நாடிமிக வேட்டைவந்தே
வல்ல மிருகம் வதைத்தானும் அவ்வனத்தில்
வேற்கா ரரும்பெரிய விற்கா ரரும் கதித்த
சேற்கா ரரும்திரண்டு சேர்ந்தே அணிஅணியாய்
செல்லுவதும் வேட்டுத் திடீர்என்று எழும்புவதும்
வெல்லும் ரணபேரி மெத்தஒலி ஆனதுவும்
கண்ணுரக் கண்டுசிலர் காதிலும்கேட் டோம்எனவே
பண்ணுர் மொழிமாது பாங்கிஇந்த வாறுஉரைக்க

தாய் மகிழ்தல்

வித்தரித்தல் போதும்அடி மெய்ப்பாங்கி நாயகமே
துத்துமார்க் கங்கள்இந்தச் சூட்சமும்எங் கேபடித்தீர்
தண்டாம லேவலியத் தானே இளங்கரும்பு
கண்டால் மதயானை கைநெகிழ விட்டிடுமோ
தாலமகிழ் நல்லதம்பிச் சக்கரைமன் ருடிஎனும்
மால்கண்டால் நான்ஈன்ற மாதைவிட்டுப் போவானே
வல்லவரைத் தான்சேர்ந்து வாழ்சலுகைக் காரியைநான்
சொல்லவும்தான் கூடாதே சோர்வுரைக்க ஒண்ணுதே
சந்த்ரவத னன்பவுதைச் சாமி தனைமருவப்
புந்திஉற்றுப் போனதுஅன்றிப்
பூவைஉற்றுப் போனவ்ளோ

அன்னாள் முகுந்தர் பதினாரு யிரஅரச
மின்னாரைச் சேர்ந்ததன்மை வேளாள வேந்தனுக்கே

அப்படியே சேர அனேகமட வார்இவனுக்கு
இப்படியில் உண்டெனவே என்மாது அறியாளோ

பவுதைநகர் வேந்தனுக்குப் பண்பான மங்கையர்கள்
இவளைப்போல் மெத்தஎன்பார் ஈதும் அறியாளோ

வண்டறியாப் பூவும்உண்டோ மாதர்களே நீங்கள்எலாம்
கண்டறியா தேவனத்துள் கன்னிதனைச் சேர்வானோ

உள்ளபடி அல்லாமல் ஒன்றும் குறையாதே
எள்அளவு வேதன் எழுத்தை விலக்குவரோ

ஆனால் இனிச்சலித்துஇங்கு
ஆவதென்ன போவதென்ன
மானாரைப் பேசிஎன்ன வைவதென்ன செய்வதென்ன

தாய்அறியாப் பேச்செனினும் தையல் நடத்தினது
ஞாயம், அறம் யாவருக்கும் நல்லதையே செய்துவந்தாள்

உந்தன் திருவழகுக் குற்றதுரை என்பதற்குச்
சந்தேகம் இல்லைஅடி சந்தோஷம் ஆச்செனக்கு

இலகு வடிவனமே இப்பலன்பெற் றாய்வனத்துள்
பலபூநின் கைக்கொளப்போய்ப்
பாக்கியங்கள் கொண்டுவந்தாய்

பூஉலகில் கும்பிடத்தான் போனதெய்வ மேஎதிரே
மேவி வருதல்என வேண்டுதவம் நான்புரிந்தேன்

பொற்பூவும் வாசனையும் போலவந்து சேர்ந்ததுநாம்
நற்பூவில் நீபுரிந்து நம்புவிர் தாச்செயலே

என்றுரைத்துத் தன்மகளை ஏற்கை யுடன்தழுவி
இன்றுமுதற் பூமடந்தை எய்தும்உந்தன் பாங்குஎன்றாள்

தன்மதுரை நல்லதம்பிச் சக்கரைமன் றாடிவள்ளல்
நன்மைபெறச் சேர்ந்துநன்றாய் நாளுக்கு நாள்மேலாய்

தான்இருந்த தண்டிகைமேற்
கொண்டு தழைத்தோங்கித்
தேனுடன்பா லும்போலச் சேர்ந்துமிக வாழ்ந்திருப்பாய்

என்றணையார் வாழ்த்தி விடையேகொடுக்க அப்போது
நன்றென்று தான்குணபால் ஞாயிறுவந்து உற்றதுவே

அந்தச் சமயத்து அனேகமட வார்சூழ
விந்தைச் சிவிகையும்தான் வாசல்வர மெல்லிகண்டாள்

பூவைதனைக் கண்டவுடன் பொன்தண் டிகைஏற்றி
நாவலர் மெய்ப்பாங்கி நாயகத்தை யும்விடுத்தாள்

நானிலத்திற் கீர்த்திகொண்ட
நல்லதம்பிச் சக்கரைவேள்
தான்சுகிக்க வாழ்ந்திருந்தாள் தையல்எனும் காதலியாள்

கன்னிகை சிரோமணியாம் காமரச சஞ்சீவி
இந்நிலத்துட் புத்திரரை ஈன்றுமகிழ் வுற்றிருந்தாள்

பூங்கமல மாதுயர்ந்து பூதலம்எ லாம்வாழி
காங்க யன்நன்னாடு களித்து மிகவாழி 465

நல்லதம்பிச் சக்கரைமன் ருடிஇ ராசசிங்கம்
சொல்லரிய காராளன் சுற்றத் துடன்வாழி

சீர்கொண்ட காரைத் திருநகர் ஆனூர்வாழி
ஏர்கொண்ட நாவலர்கள் எல்லோரும் தான்வாழி

பிற்சேர்க்கை - பக்கம் 37

கும்பகோ ணப்பதியும் கோட்டையும்சற் றேபார்க்கச்
செம்பொன் துகில்அதனைத் தேர்ந்து நெகிழ்த்தீரோ 286

கட்டி அணைத்துக் கதுப்பில்ஒரு முத்தம்இட்டு
வட்டமுலை யுள்பவள மாலையாய்ச் சூட்டேனோ

தாங்கரிய மாமுலையைத் தாகம் தணிவதற்கு
மாங்கனியைப் போல் எனது வாயாற் சுவையேனோ

தக்க வனச்சாரி தான்ஆட வந்தவனை
மிக்கமத னச்சாரி மெய்ச்சண்டைக்கு என்னைவிட்டால்

அங்கதே சங்கள்பற்றி ஆர்த்துமைகூ ரைப்பறித்துத்
துங்க விலாடபுரம் சூழ்ந்துயர்வள் ளாபுரத்தைச் 290

சுத்தி அளாவிஅங்கே தோன்றுகண்ண னூரினுடன்
அத்தியத்தி சண்பகவூர் ஆங்குமெள்ள வந்தணுகி

தொண்டைநாட் டைக்கவர்ந்து தோணும் பகுதிதர
விண்டுதிங்க ளூர்சேர்ந்து மேவவே ணிச்சங்கமும்

மலைநாட்டைக் கையில் வசப்படுத்தி ரேகைகண்டு
தலைமாலை வாயில்நண்ணித்
தாங்கலிங்கத் தைத்திறையாய்

ஆகம்ப னூர்நெருக்கி அச்சம்இல்லா தேஅரச
னூர்புகுந்து சண்டைசெய்தே உள்ளம் குளிரேனோ

முன்னம்ஒரு மான்வேட்டை மூண்டுசெய்ய வந்தவனை
இன்னம்ஒரு மான்வேட்டைக்
கென்னைவிளையாடவிட்டால் 295

எவ்வனத்தை யும்சூழ்ந்து இனிய கணு வாய்அடுத்துக்
கவ்வும் புலிநெருக்கிக் காட்டிமிகு புள்ஓசை

மான்குழம்புத் தாரைகண்டு மல்லேறி மத்தகத்தை
ஏன்கவு ளால்அழுத்தி இன்பம்உறச் சேரேனோ

செய்ய மலர்எடுத்துச் சேர்த்தணிய வந்தவள்உன்
மெய்யில் மலர்அணிய
வேணும்என்றே என்னைவிட்டால்

கண்குவளைப் பூஎனது கண்ணிலே ஒற்றிஒற்றிச்
செண்பகப்பூ வைப் புலந்து செம்மா துளைப்பூவின்

தேன்திருத்தி உண்டு சிறந்த வலம் பூரித்து
தான்கரத்திற் கோவையிட்டுத்
தாமரைப்பூவும் சேர்த்து

கோங்கரும்பி ரண்டையும்கைக்
கொண்டுகொடி மல்லிகைப்பூ
ஓங்கித் துவண்டாட உள்ளுறைசெந் தாமரைப்பூ

அலர்ந்து முகிழ்விரிய அன்போ(டு) அதிலே
கலந்தணைந்து காந்தட்பூ கையில் அணியேனே

சீர்மதன கேளித் திருவிழாத் தான்நடத்தி
நீர்மனது சம்மதித்து நேராய் எனை அழைத்தால்

முன்னே கொடிஏற்றி முகூர்த்தம் வழுவாமல்
பின்னேசட் டஞ்சேர்த்துப்
பெய்வளைப்பூத் தொங்கவிட்டு

பொற்கலசம் தான்பதித்துப் பூம்பா யிலின்மீது
நற்சங் கிலிஅசைய நாடிமெத்தை வீதிதனில்

ஊர்ந்துஇரதம் தான்உலவ ஓசைத் தொனிமுழங்கச்
சேர்ந்துகூ ழக்கவரி சீராய்ப் பணிமாற

நேமத் தொடுவாசம் நேர்ந்து கமகமெனக்
காமத்தேர் ஏறிக் கலந்து நடத்தேனே

வாதுக் கிருந்த மடக்கொடியே நீஆடும்
சூதுக் கெனைஆடச் சொல்லிஅழைத் தீரானல்

குங்குமக்காய் கையாடிக் கொள்பசலைக் காய்அகற்றி
அங்கருப்பை யேகடித்தே அங்கே சிவப்பேற்றி

பூவில் வைத்துச் சோடாக்கிப் போந்தமலை யிற்படுத்து
மேவி ஒருசாரி விளையாடிப் பாரேனோ

வல்லசது ரங்கம்என வன்மையுடன் ஆடஉங்கள்
நல்லசது ரங்கம்அதை நான்ஆட நீர்அழைத்தால்

முந்தச் சகடதனை மோதாம லேநிறுத்தி
அந்தப் பதாதிமுதல் ஆகத் தொடர்ந்தேற்றி

அங்கே அரிதின்நிலை ஆய்ந்துபிச காமல்வைத்துப்
பொங்கமிகும் அக்கரத்திற் போரானையை நிறுத்தி

ஆள்ஏறித் தான்அமைத்தால் ஆர்த்துப்பரி பின்ஏற்றி
வேளே எனக்கூட வெற்றிகொண்டு வெல்லேனோ